204

# ஜகன் மோகினி

மார்ச்
1953

JAGAN MOHINI
ESTD. 1923

அணா
நான்கு



ஒரு அபூர்வ
நடராஜ
விக்ரகம்

MADRAS

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க.
ஜகன்மோகினி !
மனத்தைச் சார்ந்து.
– வீராகவ கவி

மலர் 30 | நந்தன ஹூ | மார்ச்
இதழ் 3. | மாசி மீ | 1953

## கொண்டாடி வாழ்த்துவோம்

நம் பாரதநாட்டில் எந்த மூலைமுடுக்குகளில் உள்ள க்ராமாந்திரம்முதல் சகலமான இடங்களிலும், ஸ்ரீமதி ஸரஸ்வதி பாய் அம்மாள் அவர்களைத் தெரியாத ஜனங்களே இல்லை. அவருடைய ஒப்புயர்வு அற்ற ஹரிகதாம்ருதத்தையும் மதுரமான சங்கீதத்தின் அமுதபானத்தையும் பருகாதார் யாருமே இல்லை என்று திட்டமாகச் சொல்லலாம். அந்தம்மாளை சுமார் 35 வருஷங்களுக்குமேலாக எனக்கு வெகு நன்றாகத் தெரியும். இன்று நம்நாடு சகலவிதமான கலைகளிலும் வெகு தைரியத்துடன்—பிறர் கைதூக்கிவிடும் பேருதவிகளுடன்—முன்னேறி வருவதையும் நாமே ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிறோம். 40வருஷங்களுக்கு முன்பு, ஒரேஒரு தனிப்பட்ட பெண்மணி ஹரிகதை என்கிற விஷயத்தைத் தாங்கி முன்னே தைரியமாய் வந்தபோது சொல்லில் அடங்காத எதிர்ப்புகளை—பூசல்களை—த்வேஷங்களை-எல்லாம் லக்ஷயம் செய்யாமல் நீந்தியடித்து ஜெயித்து புகழ்ஏணியில் விடாமுயற்சியுடன் ஏறி கீர்த்தி என்கிற சிகரத்தில் ஆரோகணித்து விட்டார்கள். பிறகு எத்தனையோபேர்கள் அதே ஏணியில் ஏறப்பார்த்தார்கள்: இந்தம்மாளைவெல்லநினைத்தார்கள். காளைபரியந் தம்கைகூடவில்லை.

அம்மாளின் அசைக்கமுடியாத பக்தி, நம்பிக்கை, குருபக்தி, திடசித்தம், கலையில் அபார ஆர்வம், பாண்டித்யம் முதலிய உத்தமமான பக்கபலங்களின் உதவியால் இன்றும் அன்றுபோலவே உழைத்துவருகிறார்கள்; ஹரிகதை என்கிறகலைக்கு ஆதரவின்றி சருக்கி விழும்படியான காலம் இருக்கும்போதும் அம்மாளின ஹரிகதைக்கு என்றும் ஒரேமாதிரியான ஆதரவும் ரஸிகர்களின உத்ஸாக வரவேற்பும இருப்பதைக் கண்டு உலகமே ப்ரமிக்காமலிருக்கமுடியாது. அத்தகைய கலா ஸேவை செய்துவரும் அந்தம்மாளின் சஷ்டியப்தபூர்த்தி வைபவத்தை நடத்திவைக்க முக்யமாய் சங்கீத சபைகளும், ம்யூஸிக் அகாடமியும் முன்வந்து இக்காரியத்தைச் செய்துவைக்கும் என்றே நான் பூர்ணமாய் எதிர்பார்த்தேன். அந்த விஷயத்தில் எனக்குப் பெரிய ஏமாற்றமேதான்; ம்யூஸிக் அகாடமியில் இந்தம்மாளை ப்ரஸிடெண்டாகத் தேர்ந்தெடுக்காமல் ஏதோ வாழ்வழுகொழுகொமா என்று மரியாதை செய்தது மிகவும்

தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்

18317

# கோயில் நாகரிகம்

## பி. ஸ்ரீ.

நமது ராஷ்டிரபதியாகிய பாபு ராஜேந்திரப்பிரஸாத் தமது தென்னிந்திய யாத்திரையில் முக்கியமாகப் பெரிய கோயில்களுக்கெல்லாம் சென்று தரிசனம் செய்து வந்தார்; சேதுஸ்நானம் செய்தார்; ராமேச்வரத்தில் வழிபட்டார். மதுரை மீனாட்சி சுந்தரேசரையும் அழகர் கோயிலில் சுந்தரராஜனையும் வணங்கினார். 'கோயில்' என்ற சிதம்பரத்திலும், திருவரங்கமாகிய பெரிய கோயிலிலும் பக்தி பண்ணினார்......கோயில் நாகரிகம் தமிழ்ப்பெருமக்களின் சிறப்பியல்புகளில் ஒன்று என்பதை ராஷ்டிரபதி நன்குணர்ந்திருக்கவேண்டும். இதை ஒருவாறு உணர்ந்துதான் சென்னை அரசாங்கமும் கோயில் கோபுரத்தை அடிப்படைச் சின்னமாகக்கொண்டுள்ளது. இக்கோயில் நாகரிகம் இந்த நவநாகரிகச் சூழ்நிலையில் நமக்கு நினைப்பூட்டும் சில போதனைகளை நாமும் உணர்ந்துகொள்ள முயலலாம்.

இந்தியாவின் தனிப்பெருஞ்சிறப்பினை அரசியல் துறையிலே காணமுடியாது. ஒரு காலத்தில் குபேர நாடாக இருந்தபோதிலும் ஐசுவரியமன்று இந்தியாவின் சிறப்பியல்பு. நீண்ட காலமாக இந்தியா கலைமகளை உபாசித்து வந்திருக்கிறது; விஞ்ஞான தேவியையும் புறக்கணித்துவிடவில்லை. எனினும் விஞ்ஞானத்துறையில் இந்தியா பெருஞ்சிறப்பு அடைந்ததென்று சுட்டிக்காட்ட இயலாது. கலைத்துறையில் நிகரற்ற சாதனைகளைச் செய்திருந்தபோதிலும், சுகபோகவாழ்க்கையைக் காட்டிலும் ஆத்மவாழ்க்கைக்கும் பயன்படுமாறுதான் கலாசிருஷ்டிகளையும் செய்து வந்திருக்கிறது. இந்தப் பொதுவிதிக்குத் தமிழ்நாடும் விலக்கன்று.

சங்ககாலம் தொட்டுத் தமிழ்நாடு ஆத்ம சம்பத்தையே மேலான சம்பத்தென்று கருதி வந்திருக்கிறது. ஞானவீரமே அதிவீரமென்று மதித்து வந்திருக்கிறது. ஆழ்வார்—நாயன்மார் காலம் தொடங்கி, பக்திப் பெருங்காதலே தனிப்பெருங்காதலென்று நம்பிவந்திருக்கிறது. பக்தி கட்டி நிறுத்தியுள்ள பெருங்கோயில்களில்தான் இப்போது நமது ராஷ்டிரபதியும் ஆத்மநலம் பெற்றுப் போகிறார்.

வேதோபநிஷத காலங்களில் வடஇந்தியா பனிமூடிய ஞானப் பிரதேசங்களிலும் துணிந்து சிந்தனைகளைச் செலுத்தி, உலகத்திற்கெல்லாம் ஒருயிரான பரம்பொருளைக் கண்டுகொண்டது. அந்தப் பரம்பொருளை ஒரு பரமபுருஷனாகவும் கண்டு களித்தது. கடவுள் ஸர்வாந்தர்யாமியாக உலகமெங்கும் வியாபித்திருக்கிறான்; உலகம் கடந்த பொருளாகவும் இருக்கிறான். இப்படிப் பிரம்ம ரகசியங்களை உபநிஷத முனிவர்கள் தவங்கிடந்து மாசுகளைந்த மனத்தினராய்க் கண்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

தென்னிந்தியா ஆழ்வார்—நாயன்மார் காலத்திலே வேதாந்த சிந்தனைகளைக் கலைகளாக்கி உலகத்திற்கே ஓர் ஆவியாகிய பரம்பொருளை, பரமபுருஷனை,

ஆவியை, அரங்க மாலை,

என்றவாறு பள்ளிகொண்ட ஸ்ரீரங்கநாதனாகப் போற்றினார்; கூத்தாடும் தெய்வமாகவும் வழிபட்டார்கள்.

சிதம்பரத்திலே நடராஜா; ஸ்ரீரங்கத்திலே ஸ்ரீரங்கராஜா. ஏன், நடராஜாவுக்கு மிகவும் அருகிலேயே பள்ளிகொண்ட கோவிந்த ராஜா. 'அறிதுயில் அமர்ந்த' மூர்த்தியைப் போற்றியது ஸ்ரீவைஷ்ணவம்; 'ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்து' ஆடிய பெருமானைப் போற்றியது சைவம்.

இந்த இரண்டு மூர்த்திகளையும் குறித்துப் பாடப்பெற்றுள்ள கவிகள் தமிழ் இலக்கியத்தில் அருட்பெரும் கவிதையென்று பக்தர்களால் பாராட்டப்படுகின்றன. இக்கவிதையைத் தமிழர்களின் விசேஷ உரிமைச்செல்வம் என்று கூறலாம்.

ஏனென்றால், உலகத்தின் வேறு எந்த இலக்கியத்திலும் இவ்வளவுஉருக்கமான இவ்வளவு வசீகரமான பக்திப்பாடல்களைக் காணமுடியாது. ஸம்ஸ்கிருதத்திலும் பக்தி இவ்வாறுவெள்ளமிட்டு இத்தகைய இலக்கிய விளைவு பெற்றிருக்கவில்லையென்பது மறுக்கமுடியாத உண்மை. இத்தகைய அருட்கவிதைதான் தமிழகத்தின் கோயில்களுக்கும் தெய்விக அழகு தந்திருக்கிறது.

நமது சங்கீதத்தைத் தெய்வகீதமாக்கியதும் பக்திதான்,— 'பண் சுமந்த பாடல்'களான அருட்கவிதைதான் என்றாலும் மிகையாகாது. 'வாழ்க்கையின் அபஸ்வரங்களையும் போக்கிக்கொள்ள உதவுதான் சங்கீதம்: நாதப்பிரம்ம உபாஸனையல்லவா?' என்ற நிலைக்குச் சங்கீதத்தை இந்நாட்டிலே உயர்த்தியவை, ஆழ்வார்—நாயன்மார்களின் பக்திகீதமும், சங்கீதத்தின் முக்கிய வளர்ப்புப் பண்ணை கோவில்களாக இருந்ததும்தான் என்று ஊகிக்கலாம். இத்தகையஉரிமைச்செல்வமாகியசங்கீதத்தைஅதன் தெய்வத்தன்மை குன்றாது பாதுகாப்பதும் தமிழர் கடமையாகும்.

நடனமோ இறைவனை நாடும் ஆனந்தக் கூத்தாகி விட்டது. ஆண்டவனைச் 'சங்கீத ராஜா' என்று கூடச் சொல்வதில்லையே— 'நடராஜா' என்றல்லவா போற்றுகிறார்கள்? இத்தகைய நடனத்தையும் ஓர் அருமையான உரிமைச் செல்வமாக, ஓர் அதிசயமான தெய்வக் கலையாகப் போற்றுவது நம் கடமையாகும்.

சித்திரக்கலையும் ஒரு தெய்வக் கலையாகவே போற்றப்பட்டது. ஆண்டவன் திருவிளையாடல்களையும் அடியவர் கதைகளையும் அழகான ஆலயச்சுவர்களில் எழுதி மகிழ்ந்தார்கள். திருப்பாவையின் பாடல்களுக்கெல்லாம் சித்திரங்களைக் கோயில்களில் இன்றும் காண்கிறோமல்லவா?

தேவாலயங்களைச் சிற்ப அரண்மனைகளாகவும் செய்திருக்கிறார்கள். சிற்பச்செல்வங்களுக்குப் பேர்போனவை தமிழ்நாடு என்பதை அறியாதார் யார்? கோயில்களிலுள்ள சிற்பங்களைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கும் அழகுக் கலைஞர்களே, நமது சிற்பக்கலைக்கும் சித்திரக்கலைக்கும் புத்துயிர் அளித்து ஒரு மறுமலர்ச்சி யுகத்தைத் தோற்றுவிக்கமுடியும்.

சில மதங்களில் அழகையும், அறிவையும்கூடத் தெய்வசத்துரு என்று கருதினார்கள். பொய்பேசின உதடுகளைப்போல் புன்சிரிப்புத்தவழும் உதடுகளையும் ஆண்டவன் வெறுப்பதாகக்கருதுவாராயினர். கலை,பக்திக்கொலை!' என்று மயங்கியவர்களும்உண்டு.

தமிழர்களோ 'சுத்த அறிவே சிவம்' என்றனர். 'அன்பும் சிவமும் இரண்டல்ல' என்றனர். இறைவனை அழகனாய்க் கண்டனர். இயற்கையழகிலும் இறையழகு கண்டனர். கலையழகிலும்

கடவுளைக் கண்டனர். இத்தகைய ரஸிகத்தன்மையைத் தமிழர்களின் விசேஷ உரிமைச் செல்வம் எனலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நம்மவர் மனித உள்ளத்திலும் கடவுளைக்கண்டு வழிபடுவாராயினர். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்; இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்' என்னும் கொள்கை கொண்டவர்கள் மனிதனை 'நடமாடும் கோயிலா'கக் கண்டனர். ஆண்டவனை 'உறங்கும் பெருமாள்' என்றவர்கள், அன்பனை 'உலாவும் பெருமாள்' என்றனர். உடம்மையும் கோயிலாகக் கொண்டதால், உடம்பைப் பழிக்கவும் புறக்கணிக்கவும் பக்திமதம் இடம் கொடுப்பதில்லை.

அண்டை வீட்டுக்காரனும் பெருமாள்தான்; அன்னியனும் 'உலாவும் பெருமாள்'தான். கோவிலிலும், நம் இதயப்பூங்கோயிலிலும் நாம் வழிபடும் அழகனே பிறர் நெஞ்சிலும் கோயில் கொண்டிருக்கிறான்.

**செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே**

என்று ஏழைகளின் நெஞ்சிலுள்ள இறைவனையும் இறைஞ்ச வேண்டியதுதான். 'தாழ்ந்தவர்' என்று ஒதுக்கப்பட்டவர்களின் உள்ளங்களிலும் பரிசுத்தமான கோயில்களிற்போலக் குடிகொண்டிருக்கிறான் இறைவன். ஏழைகளிடத்திலும், தாழ்ந்தவர் வீழ்ந்தவரிடத்திலும் இறைவன் கருணை பள்ளமடையிற் பாய்வதுபோலப் பாய்கிறது என்பதும் நம் பக்திமதக் கொள்கைதான்-

கதியற்றவருக்கு 'நானே கதி' என்கிறானும் ஆண்டவன்,

**அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள்**

என்று திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரும் பாடியிருக்கிறாரல்லவா?

நீசனேன், நிறைவு ஒன்றும் இலேன்' என்னும் பணிவு அல்லது தாழ்வுதான் நம்மை இறைவனடி நிழலில் வாழவைப்பது. குற்றவாளிகளும் பாவிகளும் கூடத் தீண்டத்தகாதவரல்லர், பாவமும் குற்றமும்தான் தீண்டத்தகாதவை.

எங்கும் திரிந்து தீண்டித் திருத்துவது அருள்; இதற்கு மாறாக நம்மை மயங்கவைக்கும் சாதிச் செருக்கும், செல்வச் செருக்கும்' கல்விச் செருக்கும் மருள் என்றே கருதப்படவேண்டும்.

***ஆதியந்தமனந்தமற்புதமான வானவர் தம்பிரான்***
***பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுய்ந்திட***
***தீதில்நன்னெறிகாட்டி யெங்குந்திரிந்து அரங்கனெம்மானுக்கே***
***காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல்செய்யுமென்***
[நெஞ்சமே!

நம் பக்தி மதத்தின் ஸாரமாகிய இத்தனிப்பெருங்கொள்கையை நம் உரிமைச் செல்வத்தின் ஒரு பெருஞ்சிறப்பியல்பு என்றே கருதலாம். இக்கொள்கையை நன்குணர்ந்து நாட்டுப் பணிபுரிவதே தேசபக்திக்கு அழகாகும்.

இப்படிப்பணிபுரிவோர் தமிழகத்தின் உரிமைச்செல்வங்களை நன்கு பாதுகாப்பார்கள்; வெளிநாடுகளுக்கும்வாரிவழங்குவார்கள்; நாமும் அனுபவித்தவாறே வாரி வழங்க வழங்க நமதுபொக்கிஷம் முன்னிலும் நிறைந்து பொங்குவதாகும்.

இது இன்று நம்கோயில்கள் நமக்குச் செய்யும் உபதேசம் என்பது என்கருத்து.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்
B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## 1932

### கோடை விடுமுறை

என் பெற்றோர்கள், சகோதரிகள் குழந்தைகள் சிலருடன் எங்களுக்கு மிகப் பிரியமான பாபநாசத்துக்குப் போய் சுமார் $1\frac{1}{2}$ மாதம் அங்கு நிம்மதியாகத் தங்கியிருந்து முண்டந்துறை, பாண தீர்த்தம் முதலான இடங்களுக்குப் போய்வந்தோம். நதி அருவிகளில் பிரதிதினம் 2 வேளை ஸ்நானம்.

என் தாயாருக்கு எப்போதுமே அவரது பெரியோர்களிடம் பக்தியும், அவர்களது ஒற்றுமை, பந்துப்பிரியம், கடமையை உணர்ந்து பந்துக்களுக்குச் செய்யும் உதவி, கூட்டுக்குடும்பங்களில் உள்ள அனுகூலங்கள் இவற்றில் பெருமையும் உண்டு. ஆகவே இந்த விடுமுறையில், தஞ்சை ஜில்லாவில் நீடாமங்கலம், அதனருகிலுள்ள ரிஷியூர், வைகளத்தூர், முல்லை வாசல், பூவனூர் என்னும் கிராமங்களில் வசித்துவந்த அவரது பெரியோர்களின் சரித்திரத்தை, அவர்களது வாழ்க்கை வரலாற்றை "ஒரு ஐக்கிய குடும்ப சரித்திரம்'' என்னும் தலைப்பின் கீழ் எழுத ஆரம்பித்தார். அதை அச்சுக்கு ஏற்றவிதமாய் திருத்தி யமைத்து எழுதும் பணி எனக்கு ஏற்பட்டது. விவாக சம்பந்தத்தினால் பிணைக்கப்பட்ட பல குடும்பங்களின் வம்சாவளிகளை (Geneological Tables) பந்துக்கள் சிலரிடமிருந்து சேகரித்து சரித்திரத்துடன் சேர்த்து 1933-வது வருஷத்தில் 500 பிரதிகள் மாத்திரம் அச்சிடப்பட்டது.

இந்த வருஷம் என் சகோதரி சாவித்திரி பெண் சாந்த சுந்தரி M. B. C. M. பரீக்ஷையில் ராஜதானியில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று ஜான்ஸ்டன் பதக்கம் (Johnston Medal), ஹோபார்ட் பரிசு Grand Duff Medal மூன்றும் பெற்றது எங்கள் யாவர்க்கும் சந்தோஷமாயும் பெருமையாயுமிருந்தது. என் தங்கை பாலத்தின் புதல்வன் ஜயிராமன் B. E. பரீக்ஷையிலும், சாவித்திரி புதல்வி லலிதா L. T. பரீக்ஷையிலும் தேர்ச்சி பெற்றனர்.

என் தாய் மாமனுடைய புதல்வியின் விவாகம் மே 30-ந்தேதி மன்னார்குடியில் நடந்தது. என் தாயார், சித்தி, பேரன் பேத்திகள் சிலருடன், அந்த விவாகத்துக்குப் போய்விட்டு, பிறகு சிலர் பல் லாரியில் ஸ்வர்ணத்திடம் போய் சிலநாட்கள் இருந்துவிட்டு வந்தனர். சிலர் குற்றாலம் போய்வந்தனர். மற்றவர்கள் பல இடங்களுக்குப் போய்வந்தனர். என் தகப்பனாரும் நானும் மாத்திரம் பாபநாசத்திலேயே இருந்துவிட்டு ஜூன் 16 ஆந்தேதி சென்னை திரும்பி 20 ஆந்தேதி ஹோபார்ட் ஸ்கூல் திறக்கப்பட்டு வேலை ஆரம்பித்தேன்.

என் அம்மான் புதல்வன் ஸ்வாமிநாதன் என் தங்கை குழந்தைகளுடன் எங்கள் குடும்பத்திலேயே ஒருவனாக இருந்து

வளர்ந்து B. A. முடித்து ஆடிட்டர் வேலைக்குப் பழகி வந்தான். அவனது விவாகத்துக்கு தகப்பனாரையும் என்னையும் தவிர மற்ற யாவரும் சென்னையிலிருந்தே ஒரு பஸ்ஸில் செய்யாறு என்னுமிடத்துக்கு மிகுந்த குதூகலத்துடன் ஜூலை 10-ஆந்தேதி போய் வந்தனர்.

ஜூலை முதல் தேதி சாரதா வித்தியாலயம் திறக்கப்பட்டது. ரங்கூனில் எங்கள் குடும்பத்தினருக்கு மிகுந்த சிநேகமுள்ள ஸ்ரீமதி நாகம்மாளின் ஏற்பாட்டில் ஒரு சிறு சங்கீதக் கச்சேரி வைத்து அதில் சேர்ந்த தொகை 350 ரூபாயும், ஸ்ரீமான் சர்மா என்பவரின் உதவி 50 உம் வித்யாலயத்துக்குக் கிடைத்தது. ஆகஸ்ட்மாதத்தில் இஞ்ஜினியராயிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு மயிலை கச்சேரி ரோடில் வசித்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் பாஸ்கரய்யர் என்பவர் வித்தியாலயத்தில் மிகுந்த அபிமானத்துடன் அவரது சிநேகிதர் (திருச்சி) ஸ்ரீமான் T. S. ராமசந்திரய்யர் என்பவரிடமிருந்து வித்தியாலயத்துக்கு ரூ 1000 கொண்டுவந்து கொடுத்தார். திருச்சியில் டாக்டர் T. S. ராமச்சந்திர அய்யரின் சகோதரி ஸ்ரீமதி காமாக்ஷியம்மாளின் ஒரே அருமை புதல்வன் V. சுப்ரமணியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது இளம்வயதில் பரமனடி சேர்ந்து விட்டான். இந்தப் பிரிவினால் ஏற்பட்ட துயரம் தாளாமலிருந்த காமாக்ஷியம்மாளை தேற்ற முடியாமல் தேற்றிக் கொண்டிருந்தார். ராமச்சந்திரய்யர் ஸ்ரீமான் பாஸ்கரய்யருடைய ஆலோசனைக்கிணங்க ஏற்கனவே கொடுத்த ரூ 1000 தவிர மறுபடி ரூ 3250 கொண்டுவந்து கொடுத்து 4000 ரூபாயை ஒரு Endowment ஆகவைத்து அதில் வரும் வட்டியை "V. சுப்ரமணியன்" பெயரால் வித்தியாலயத்தில் ஒன்றிரண்டு ஏழை மாணவிகளுக்கு உதவி செய்யும்படி ஏற்பாடு செய்தார். ஸ்ரீமான் பாஸ்கரய்யரே வருஷம் ரூ 100 வித்தியாலயத்துக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இதற்குமுன் பழக்கமேயில்லாத இப்பெரியார் அவராகவே முன்வந்து வித்தியாலயத்தின் நன்மையை யறிந்து தன் சிநேகிதருக்கும் அதை உணரும்படி செய்து உதவி வாங்கிக்கொடுத்த பெருந்தன்மையான வள்ளன்மையை மறக்க முடியாது. நிற்க, பிரெஸிடென்ஸி காலேஜில் தாவரநூல் Botany தலைமை ஆசிரியராயிருந்த டாக்டர் ஏகாம்பரம் அவர்களின் தர்மபத்தினி வாரம் மூன்று முறை வித்தியாலயத்துக்கு வந்து இஷ்டப்பட்ட பெண்களுக்கு மிகுந்த பிரியத்துடன் ஸம்ஸ்க்ருதம் கற்பித்தார். ஸ்ரீமதி ஜானம்மாள் ஸ்ரீமதி அம்புஜம்மாள் இருவரும் ஹிந்தி பிரசார சபாவிலிருந்து ஒரு உபாத்தியாயரை ஏற்பாடு செய்து தாங்களும் ஒழிந்த வேளைகளில் வித்தியாலயம் மாணுக்கிகளுக்கு ஹிந்தி கற்பித்து அவர்களை பரீக்ஷைகளுக்குத் தயாரித்தனர்—ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அவர்களும் அவரது தர்ம பத்தினியாரும் ஆகஸ்ட் 27 ஆந்தேதி ஸ்ரீமான் ராஜா தனராஜ்கிரி நரஸிங்ஜீ என்பவரை வித்யாலயத்துக்கு அழைத்து வந்து காட்டி 500 ரூபாய் உதவி வாங்கிக் கொடுத்தனர். இது நிற்க,

ஹோபார்ட்டு ஸ்கூலில் ஆகஸ்ட் மாதம் Convocation இல் முஸ்லிம் பெண்களுக்குள் முதன்முதல் L. T. முடித்து பட்டம்

பெற்ற கமுர் உன்னிஸ்ஸா என்பவளுக்கு ஒரு ஸோஷல் நடந்தது. அந்த பாடசாலையின் Advisory Committee அங்கத்தினர்கள் இன்னும் சில பெரிய முஸ்லிம் பெருமாட்டிகள் வந்திருந்து இதை பெருமையாகக்கொண்டாடினர். முஸ்லிம் பண்டிகைகள், ரம்ஸான், மீலாடி நபி, பக்ரீத் Bakrid இவற்றுக்கெல்லாம் விடுமுறைகள், இவற்றின் கருத்து, கொண்டாடும் விதம், மகம்மதியர்களுடைய வழக்கம் பழக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள் இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டதில் எனக்கு மிகுந்த திருப்தி. சற்று வயதான பெண்களுக்காக அந்த ஸ்கூலில் ஒரு கைத்தொழில் வகுப்பு உண்டு. சுமார் 30, 35 பேர் அந்த வகுப்புக்கு வந்து தையல் வேலைகள், ஜிகினு சரிகை வேலைகள் எல்லாம் கற்றுக்கொண்டு அதற்கு ஊதியம் பெறுவது வழக்கம்—கவர்மெண்டிலிருந்து அவர்களுக்கு மாதாமாதம் உதவிச் சம்பளம் உண்டு. வருஷம் ஒன்றிரண்டு தடவைகள், அவர்கள் செய்யும் அழகிய பொருள்களையெல்லாம் ஒரு Sale வைத்து விற்பது வழக்கம். அதில் படித்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் கணவன் ஒருநாள் என்னிடம் வந்து அவள் தன்னுடனிருந்து குடித்தனம் செய்ய விரும்பவில்லையென்றும், தாய் வீட்டுடன் இருப்பதாயும், தான் வேறு விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அதற்கு இவள் விவாகரத்து செய்வதற்கு உடன்படவேண்டுமென்றும் அதற்கு அவளை நான் இணங்கும்படி புத்தி கூறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். நான் கவனிப்பதாகக்கூறி அவனை அனுப்பிவிட்டு அந்தப் பெண்ணையும் அவள் தாயாரையும் விசாரித்தேன். அதற்கு அவர்கள்சொன்னதாவது: அந்தப்பெண் புருஷனிடம் மிகவும் கஷ்டப்பட்டு, அந்த இம்சை பொறுக்காமல் வந்துவிட்டாள்—விவாகரத்து Divorce செய்துவிட்டு தான் தனியாயிருப்பதையே விரும்புவதாயும் ஆனால் (நிக்கா) விவாகத்தின் போது இவளுக்கு அவன் கொடுப்பதாக சொல்லி பலர் முன்னிலையில் வாக்குக்கொடுத்திருந்த தொகையை அவன் கொடுத்தவிட வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்துவிட்டால் உடனே விவாகரத்துக்கு உடன்படுவதாகவும் சொன்னார்கள். மறுதினம் வந்த அவள் புருஷனிடம் இதை நான் தெரிவித்தபோது அவன் தலைகுனிந்து அதை ஏற்று ஒப்புக்கொண்டு, தான் ஏழையென்றும் கையில் பணம் இல்லையென்றும், கூடிய சீக்கிரம் பணம்சேகரித்து தான் நிக்காவின்போது ஒப்புக்கொண்ட தொகையை (பரிசுப் பணம்) கொடுத்துவிடுவதாயும் சொல்லிப் போனான்! சொத்து சுதந்திர விஷயத்தில் நம் ஹிந்துப் பெண்களைவிட முஸ்லிம் பெண்களின் நிலைமை எத்தனையோ மேலானது என்பதைத் தெரிந்து கொண்டேன். முஸ்லிம் சட்டப் பிரகாரம் பெண்களுக்கு தகப்பனார் சொத்திலிருந்தும் கணவன் சொத்திலிருந்தும் பங்கு உண்டு.

*1931*-வது வருஷம்வரைக்கும் இந்த ஸ்கூலில் உபாத்தினிகள் சிலரைத்தவிர மற்றயாவரும், மாணவிகள், வேலைக்காரிகள், எல்லாரும் முஸ்லிம் மதத்தினரே, முஸ்லிம் பெண்களே. கல்வி அபிவிருத்தியாவதை முன்னிட்டு முஸ்லிம் பெண்களே உபாத்தினிகளாக இருக்கவேண்டுமென்றும் அதற்கு Secondary Training வகுப்பு ஒன்று இந்த ஸ்கூலிலேயே ஆரம்பித்தனர். (தொடரும்.)

: மதுரகவியாழ்வார்

ஏ. ராஜம்மாள்

ராகம்: சுத்த சாவேரி

# கண்ணி நுண்சிறுத்தாம்பு
## கீர்த்தனை

தாளம்: ஆதி

| லகு | த்ரு | த்ரு |
|---|---|---|
| 1. தா தா— தா தப —பாதாதபபம —பா பா | மாபதபாதா -பமரிம ரீ ஸா . | ரீரீரிமமரி —ரி ம ப ம |
| க ண் — ணி நுண் —சி ... ... . —றுத் . . | தா ......ம் —பி ... ணூல் . | கட் ... . —டுண்ண . |
| 2. தா தா — ஷை — ஷை — ஷை | மபதாபதஸ்ா -- தஸ்ா தபதாப | மபாமரிமரிஸ-ரி ம ப ம |
| கண் . . — ஷை — ஷை — ஷை | தா .... ம் —பி ... ணூ . . ல் | கட் ... ... —டுண்ண . |
| 3. ஷை — ஷை — ஷை — ஷை | மபதப்பதஸ்த-ஸ்தபமரிமரிஸ | ரீரீரிமமரி —ரி ம ப ம |
| ஷை — ஷை — ஷை — ஷை | தா ... ... ம்—பி ... ணூ . . ல் | க ட் ... —டுண்ண . |
| 4. ஷை — ஷை — ஷை — ஷை | ஷை -ஸ்ரிஸ். தஸ்த . பத | ப . மபம . ரிமரிஸ-ரிமப ம |
| ஷை — ஷை — ஷை — ஷை | ஷை —பி ... ணூ . ல்கட் | . . டுண் ..... — ண ... |
| 5. ஷை — ஷை — ஷை — ஷை | ஷை —ஸ்ரிமரிஸ்த-தஸ் | ரிஸ்தப . பதஸத-பமரிஸரிமபத |
| ஷை — ஷை — ஷை — ஷை | ஷை —பி ... ... ணூ | ... ல்க ... — . ட்டுண்ண ... |
| பாபாமாபத--பமரீமா- ரீ ஸா -ஸாரீரிஸஸத | த ஸ ரி ஸ . —ரி ரி ரி ம | ப ம ப ா —ரி ம ப ம |
| பண் . ணி . .— ய . . பெ .— ரு ... —மா . ய . . ன் | எ ன் . . — . . ன . | . ப் —ப . ணி ல் |
| ஷை — ஷை — ஷை — ஷை | தாஸா தஸரிஸ-ரீ ரீ ரீ மா | ரிமபமபாபா-பமரிஸரிமபம |
| | என் .... — . . ன . . | ... . . ப் —ப ... ணி . ல் |

தா

கண்

அனுபல்லவி

| | | |
|---|---|---|
| 1. ப ப ப த—தபமாபாதா-ஸ் ஸ் ஸ் ஸ் — த ; ஸ் ரீ ஸ்ா | ரி ரி ரி ரி — ஸாரி மரீ ஸ்ா | த ஸ ரி ஸ — த ப தா |
| கண் . ணி—த் தென் . கு . -ரு ... —கூ . . ர் | கம் . பி —யென் ... ... | ற . க் . — கா . ல் . |
| 2. ப ப ப த—தபமாபதஸ்த -ஸ்ஸ் ஸ் ஸ்— த ஸ் ரி ஸ் | ரி ரி ரி ரி —ஸ்ா ரி மரிமரிஸ் | தாஸ்ரிஸ்ரிஸத-பாதஸதாபம |
| கண் . ணி-த் தென் . கு...-ரு ... —கூ . . ர் | கம் . பி — யென் ... ... | ற ... ... க்— கா ... ல் |

| | | |
|---|---|---|
| 3. ஷ — ... – ... — ஷ | ஷ —ஸ்ரிமாரிஸ்தஸ் | ரீஸதபதஸ்ா--தபமபதாபம |
| | —யென் ... ற ... | ... க்கா ... - ... ... ல் |
| 4. ஷ — ... — ... — ஷ | ஷ --ஸ்ரிமமரிஸதஸ் | ரிரிஸதபதஸஸ-தபமபததபம |
| | —யென் ... ற . | ...க்கா... — ... ... ல் |
| 5. ஷ — ... — ... — ஷ | ஷ — ரிம்ப்ம்ரிமரிஸ | தஸரிமரீஸா-தாபாதாதா |
| | ஷ — யென் ... ... | ற ... ... — க்கா ... ல் |
| 1. ஸ்ஸ்ஸ்ரி- ஸ்ஸ்ஸ்ரி--ரிஸ்தாதாதா-தாஸ்ாதாபா | மபதாபாபத--ஸ்ாதாஸ்தபம | பமரிமரீஸா—ரீமாபாதா |
| அண்.ணி-க்கு.ம.—மூ ... தா..—\|. . . .று.ம் | என் ... ணு. — ... ... ... | வு ... ... க்—கே ... ... |
| ஸ்ாஸ்ாதஸ்ரீ-ஸ்ாஸ்ாஸ்ரிமரிதஸரிஸபதஸத-பாதாதபபம | ஷ — ஷ | ஷ — ஷ |
| அண்.ணி-க்கு.ம...—மூ..தா..— ... ... று.ம் | | |
| ஸ்ஸ்தஸ்ரீ-ஸ்ாஸ்ாதஸரிம-ரிமரிரிஸரிஸஸ-தஸததபதபம | ஷ — ஷ | ஷ — ஷ |
| அண்.ணி-க்கும் அ..—மூ...தா... — ...று . . ம் | | |

சிட்டஸ்வரம்

| | | |
|---|---|---|
| பாபத—தபமப—த பா த—பபமரி | ஸாரித —,ஸதஸ | ரிஸாரி —ஸரிமப |
| அருள்கொ-ண்டா — ... . — டும் .. | அ\|..டி —. . ய . | வ.ரின் —பு.ர. |
| மாபத—,ஸ்தஸ்—ரி ஸ்ா ரி — ஸ்ரிமரி | ம ரீ ஸ் —தஸ்ரிஸ | ,தபம —ரிமபத |
| அ..ரு—..வி.—ளு..னவ்— வ.ரு | ம . . —றை.யி ன் | ..பொ. —ருள்.. |

மத்யமகாலம்

| | | |
|---|---|---|
| ஸ்ஸாதபமத-பாபா-மரிஸரி-மாரிஸரீபா-மரிமாதபதா | ஸ்ாஸ்ரிமரீஸ் -தாதஸ்ரிஸ்ரீத | பதஸாமபதஸ-,தபாமரிமப |
| அருள்கொண்டா-பி.ரயின்தமிழ்... பா—..டி.ஞன் | அருள் கண். —டி.ரிவ்வு... | ல...கி.னில்—யிக்.கதே.. |

சரணம்

| | | |
|---|---|---|
| ஸ்ஸ்தப—,பமப —தபமப —பமரிமரீஸா | ஸஸரிரி —ஸஸதஸ | ரிரிமரி —மாபப |
| கரவிளு—ல்கவின்—தின்.ப.-மெய்..கினேன் | மே . . வி —னேனவன் | பொன்னடி-மெய்ம்மையே |
| மமபத—தபதத—ஸ்ஸ்தஸ்—ரிஸ்ரிரி | ஸாரிமரீஸா—தாஸரிஸாதா | பாதஸதாபா-மாரீமாபா |
| தே.வுமற்—.றதி .—யேன்குரு —கூர்கம்பி | பா ... வி —னி..ன்னிசை | பா..டித்தி—ரிவனே. |

இங்கு சிட்டஸ்வர ஸாஹித்யத்தை அவசியம் பாடவேண்டும்

ஹிந்திக்கதை மூலம்: மொழி பெயர்ப்பு

ஸ்ரீ கமலாதேவி சௌத்ரி "ஹரிணி"

# பெண் உள்ளம்

1

"பெண்ணென்று பிறந்தால் உஷாவைப் போலிருக்க வேண்டும். அதிர்ஷ்டக்காரி, கொடுத்துவைத்தவள்" என்று அவ்வூரிலுள்ள பெண்களெல்லாம் பேசிக்கொள்வது வழக்கம். காரணம்! உஷாவின் கணவன் அவள்மீது உயிரையே வைத்திருந்தான். அவளைவிட்டு ஒரு நிமிஷம்கூட பிரிந்திருக்க அவனால் முடியாது. உஷாவைக் காணாத ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றும்; அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பக்கூட அவனுக்குச் சம்மதமில்லை.

உஷா எப்பொழுதும் கல்யாணப் பெண்மாதிரியே காணப்படுவாள். வேளைக்கொரு அலங்காரமும், வேடிக்கையும், விளையாட்டுமாகவே இருப்பாள்; அவளை விதவிதமாக அலங்கரித்துப் பார்ப்பதில் அவனுக்கு மிகுந்த ஆவல். இதற்காக அவன் புதிய புதிய அலங்காரப் பொருள்களை வாங்க சளைக்கவே மாட்டான். தினமும் சாயங்காலம் உலாவ அழைத்துச் செல்வான். சினிமா, நாட்டியம், சங்கீதக்கச்சேரி தவறவே மாட்டான்.

இணைபிரியாத, ஆனந்தமயமான இந்த தம்பதிகளைக் கண்டு மற்ற பெண்கள் பொறாமைப்படுவது சகஜந்தானே? ஒருநாள் உஷாவின் தோழி கமலிகூட அவளைக் கேட்டாள், "ஏண்டி! உஷா! நீ என்ன மந்திரம் செய்கிறாயடி? உன் கணவர் உன்னிடம் இவ்வளவு அன்பாக இருக்கிறாரே? அதை எனக்குக்கூட கொஞ்சம் சொல்லேன்" என்று.

இதைக்கேட்ட உஷாவின்மனது கர்வத்தினால்நிரம்பியது. ஆனந்த மிகுதியினால் அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. "ஆம்! நான் பாக்யசாலிதான், என் கணவர் என்னை அன்பாகவும், மரியாதையாகவும், ஆதரவாகவும் நடத்துகிறார்; என்னை அவருடைய உயிராகவே மதிக்கிறார். எனக்கு ஒரு குறைவுமில்லை" என்று அவள் கிணுக்கும்போது, அவள் முகம் கரைகடந்த சந்தோஷத்தினால் மலர்ந்தது. வெட்கமும், உத்சாகமும் கலந்த ஒரு சிறு புன்னகை அவளுடைய முகத்திற்குத் தனி அழகைத் தந்தது.

2

பீஹார் மகாணத்திலேயே ஹரிஹர் க்ஷேத்திரத்தில் நடக்கும் அந்தத் திருவிழாதான் மிகவும் பிரசித்தமானது; ஜனக்கூட்டம் சொல்லிமுடியாது; பெண்களும், ஆடவர்களும்,

குழந்தைகளும் புது ஆடைகளணிந்து, ஆனந்தமாக சுற்றிக் கொண்டிருந்தனர்.

அன்று திருவிழாவின் மூன்றாவது நாள். எங்கும் ஒரே பரபரப்பு; குதூகல ஆரவாரம்; கங்கை நதிக்கரையில் படகு விளையாட்டில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். ஆடவர்கள் தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் படகில் ஏறி உல்லாசமாக கங்கை நதியில் சஞ்சரித்தனர்.

உஷாவும் தன் கணவனுடன் ஒரு பெரிய படகில் ஏறி உட்கார்ந்தாள். அதில் அதிகக் கூட்டம் ஏறியிருந்தது; படகு செல்ல ஆரம்பித்தது; எல்லோரும் ஆனந்தமாகப் பாடினார்கள்: பூர்ணப் பிரவாகத்தின் நடுவே படகு ஆடி அசைந்து மெல்லமெல்ல போய்க்கொண்டிருந்தது.

திடீரென்று "ஐயோ! ஐயோ!" என்று கூச்சலிட்டனர். படகு சுழலில் அகப்பட்டுக்கொண்டது; படகோட்டிகளின் தைரியம் பலிக்கவில்லை; நீந்தத்தெரிந்தவர்கள் நதியில் குதித்துக் கரைசேர முயன்றனர். "எப்படியும் மரணம் நிச்சயம்; முயற்சிசெய்துதான் பார்க்கலாமே!" என்று நினைத்து நீந்தத் தெரியாதவர்கள்கூட நதியில் குதித்துவிட்டனர்.

படகில் உஷாவும், அவள் கணவனும்தான் இருந்தனர்; உஷாவின் உடல் பயத்தினால் நடுங்கியது; இரு கைகளினாலும் கண்களை மூடிக்கொண்டு, கணவனுடைய க்ஷேமத்திற்காகக் கடவுளை வேண்டினாள்.

பதி மகாபுருஷன் வரித்துக் கட்டிக்கொண்டு தண்ணீரில் குதிக்கத் தயாராகிவிட்டான்; உஷா தன்னுடைய பதியைக் கட்டிக்கொள்ள நினைத்து, கைகளை விரித்துப் பாய்ந்தாள்: ஆனால் கணவன் அதே சமயம் தன் உயிரின்மீதுள்ள ஆசையினால் தண்ணீரில் குதித்துவிட்டான்! பாவம்! உஷா! தடாரென்று படகின் தட்டில் சாய்ந்தாள்.

கரைமீதுள்ள ஜனங்கள் ஆரவாரம் செய்தனர்; அவர்கள் கூச்சலிட்டார்களே தவிர, உதவிக்கு யாரும் வரவில்லை: "ஐயோ! பாவம்! பகவான்தான் துணைசெய்யவேண்டும் எனப் பிரார்த்தனை செய்தனர்!

3

தயவுள்ள இவ்வளவு மனிதர்களின் வேண்டுகோளைக் கடவுள் அலக்ஷியம் செய்வாரா? கனம் குறைந்துவிட்டபடியால் படகு முழுகவில்லை; கரையின் ஓரமாக வந்துசேர்ந்தது: சில மனிதர்கள் உஷாவை மெதுவாகத் தூக்கிவந்து கரையில் கிடத்தினர்; உஷாவின் கணவனும் வந்துசேர்ந்தான்.

"உனக்குத்தான் நன்றாக நீந்தத்தெரியுமே, உன் மனைவியைக் காப்பாற்றக் கூடாதா? அது உன் கடமையல்லவா!" என்று பலர் அவனைக் கேட்டபோது அவன் வெட்கத்தினால்

தலை குனிந்தான் பாவம்! பேதைப் பெண் உஷா தன்கணவனை இமைகொட்டாமல் பார்த்தாள்; அவள் மனதில் வேதனை நிரம்பியது: ஐயோ! நான் ஏன் பிழைத்தேன்? என்னை ஏன் இவர்கள் காப்பாற்றவேண்டும்! நான் இறந்திருக்கக்கூடாதா?' என்று நினைத்தாள்!

ஒரு நிமிஷம்: அவளுடைய எதிர்கால வாழ்க்கையின் சித்திரம்கண்களின்முன்புதோற்றமளித்தது: ஆம்! அவளுடைய இன்பமயமான வாழ்வைக் கண்டு பொறாமை யடைந்தவர்கள் இப்பொழுது சந்தோஷப்படுவார்கள்; பரிகசிப்பார்கள்! என்ன விசித்திரம்! எல்லையற்ற அன்பின்காரணமாக என்னைப் பிறந்த அகத்திற்குக்கூட அனுப்பாத என் கணவர் இவர்தானா? "நீ இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்!" என்று கூறிய மனிதர் தானா இவர்!.... அவள் மனதில் எண்ணங்கள் ஓடின...

மறுவினாடி, "சீ! இதென்ன? நானிப்படி நினைப்பது சரியா? பயங்கரமான விபத்திலிருந்து என் பதியைக் காப்பாற்றிய கடவுளுக்குநன்றி செலுத்தவேண்டாமா? சந்தோஷம் கொண்டாடவேண்டாமா? ஆம்! வீணாக ஒருவர்மீது குற்றம் சாட்டுவது சரியல்ல: இந்த உலகத்தில் சுயநலமில்லாதவர்கள் யார்? எவருடைய அன்பில் சுயநலத்தின் நிழல் இல்லாமலில்லை? மனித சமூகத்தின் ஒவ்வொரு ரத்தநாடியிலும் சுயநல ரத்தம் ஓடிக்கொண்டுதானிருக்கிறது............ஆனால் கடமை........ என்னும் சங்கிலியால் தானே பிணைக்கப்பட்டிருக்கிறது...... ஆம், மனைவி, புருஷன், தந்தை, மகன் இவைகளெல்லாம் மாயையின் வலைகள்; யார் யாருக்கு உறவு, சொந்தம்? மாயையில் கட்டுண்டு, தன் உயிரைக் காத்துக்கொள்வதற்குச் சக்தி இருந்தும்கூட, காப்பாற்றிக்கொள்ளாவிட்டால், அது தற்கொலைக்குச் சமானமல்லவா? பாபமல்லவா?...

உஷாவின் மனதில் சிந்தனைகள் போராடின...பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு, "சீ! என்னயோசனை இது! பெண்களுக்கு இதைவிட மங்களகரமானது எது? எப்படியானால் என்ன? பதி உயிர் தப்பிவிட்டார். அதுதான் பெண்களுக்கு உண்மையான ஆனந்தம்." என்று எண்ணியவளாக, கண்களில் உத்சாகம் பொங்க எழுந்து நின்றாள்.

கணவனுடைய வெட்கத்தைப் போக்கடிப்பதற்காக "வாருங்கள்! போகலாம். நல்லவேளையாகக் கடவுள் நம்மைக் காப்பாற்றிவிட்டார்." என்று கூறிப்புறப்பட்டாள்.

ஆனால் அவளுக்கு மனதில் என்னமோ வேதனை இருக்கத் தானிருந்தது, இச்சம்பவம் அங்கே முள்ளைப்போல் உறுத்திக் கொண்டுதானிருந்தது.

* * * *

## 4

நான்கு வருஷங்கள் ஓடிவிட்டன, உஷா இப்பொழுது தாயார்; மரணத்தின் வாசற்படியில் நிற்கும் தன்னுடைய பதி

யின் படுக்கையருகிலுட்கார்ந்துக் கொண்டிருக்கிறாள். கண்ணீர் கன்னங்களின் வழியே ஓடுகின்றது. ஆறுமாதங்கள் சென்றுவிட்டன. இன்னமும் வியாதி குணமடையவில்லை பிழைப்பதற்கு நம்பிக்கையுமில்லை, 'க்ஷயரோகம்'. டி. பி. என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

தெய்வமே! நீ தான் துணை! எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே?" என்று பெருமூச்சுவிட்டாள் உஷா.

உஷாவின் மனதும், கண்களும் நதியின் பிரவாகத்தைப் போல இருந்தன, அச்சமயம் "அம்மா!" என்ற குரல் கேட்டு எழுந்தாள். அப்பொழுதுதான் தூங்கி விழித்த குழந்தையின் அந்தக் குரல் அவளுக்கு ஆறுதல் அளித்தது

உஷா கண்களைத் துடைத்துக்கொண்டாள்; ஒருநிமிஷம் கண்களை மூடியபடி கடவுளை வேண்டினாள்: "கருணைக் கடலே! என்னைத் தனியாகக் கஷ்டப்பட விடாதே" என்று வேண்டினாள்: குழந்தையை முத்தமிட்டாள், "ஐயோ! இவ்வளவு பெரிய உலகத்தில், இந்தக் கபடமற்ற குழந்தையை யார் கவனித்து ஆதரிப்பார்கள்? அனாதை என்பார்களே! ஆனால்...ஐயோ! என் அன்பரை விட்டுவிட்டு இக்குழந்தைக்காக நான் உயிர் வாழத்தான் வேண்டுமா?.....இல்லை...அது முடியாது! ஒவ்வொரு நாளும் வேதனையினால் வெந்து துடிப்பதா? என்ன!...சுயநலமா! சுகத்தை நாடும் எண்ணமா!...... அவள் யோசனைக்கு முடிவேயில்லை...

நாற்புறமும் திடீரென்று காற்று குமுறியது; மண் காற்று தொண்டையை அடைத்தது; கண்ணீர் பெருகி ஓடியது; உஷாவின் உடல் பயத்தினால் நடுங்கியது; என்ன இது? சரீரம் மட்டுமல்ல, வீடு முழுவதுமே ஆடியது: உஷா கவனித்தாள்: உலகமே நடுங்கியது; கணவனுடைய கட்டிலும் குலுங்கியது: பூதேவி தடுமாறினாள்! உஷா குழந்தையை மார்புடன் அணைத்தவண்ணம் ஓடிவந்தாள்; அதே சமயம் எங்கும் கூக்குரல், "பூகம்பம்! பூகம்பம்!"

உஷாவின் கணவன் மெதுவாக, "உஷா! ஓடிவிடு! என்னால் எழுந்திருக்கமுடியாது, என் ஆசையை விட்டுவிடு! என்னை மறந்துவிடு; ஓடு! ஓடு! குழந்தையுடன் ஓடிவிடு. சீக்கிரம்" என்றான்...

உஷா திகைத்து நின்றாள்; பயங்கரமான சப்தம்: அடுத்த நிமிஷம் வீடு விழுந்துவிடும்; ஆனால் அவள் ஒரு அடிகூட நகரவில்லை; கணவனைக் காப்பாற்றவோ வழியில்லை: கையில் குழந்தை... அவள் திகைத்தாள்...

ஒரு சுவர் விழுந்துவிட்டது. கணவன் கூச்சலிட்டான்; ஓடு உஷா! ஓடிவிடு! என் வார்த்தையைக் கேள், கண்ணே! விடை பெற்றுக்கொள்ளுகிறேன். குழந்தை பத்திரம்!"

உஷா ஓடினள். பயத்தினல் கதறும் குழந்தையை தெருவில் விட்டுவிட்டு கணவனைக் காப்பாற்ற வீட்டிற்குள் மறுபடியும் ஓடிவந்தாள்.

ஆனல்...பாவம்! விதி முந்திக்கொண்டது. மேல்தளம் தடதடவென்று இடிந்து விழுந்தது.

பேதை உஷாவுக்கு தன் சின்னஞ் சிறு குழந்தைக்காக பிரார்த்தனை செய்யக்கூட அவகாசம் கிடைக்கவில்லை.

கணவனும், மனைவியும், பூமாதாவின் கர்ப்பத்தில் சேர்ந்துவிட்டார்கள்

இணைபிரியாத தம்பதிகள் என்றும் பிரியாத நிலையில் சமாதியடைந்துவிட்டனர்!

---

சிரிக்காதே! ''என்னுரெஸ்'', திருவிடைமருதூர்

## பழக்க வழக்கங்கள்

உலகம் பலவிதம். அதிலே இது ஒருவிதம் என்று அடிக்கடி நாம் சொல்லுகிருேம் அல்லவா? இது உலகில் மனிதர்களின் சூழ்நிலைக்கும் தன்மைக்கும் ஏற்றவாறு மாறுகின்றதைக் கொண்டே ஏற்பட்ட பழமொழியாகும் இதைப்போலவேதான் சிலரது பழக்க வழக்கங்களும்.

இங்கே என் நண்பர்களில் சிலரது பழக்க வழக்கங்களை எழுதுகிறேன். படித்துவிட்டு உங்கள் அபிப்பிராயத்தையும் சொல்லுங்கள்.

1

அதோ வருகிருரே! அவரை நாங்கள் யாவரும் கண்டவுடன் அவர்கண்ணில் தென்படாமல் மறைய எத்தனிப்போம். விடமாட்டார் மனிதர்! எதற்கெடுத்தாலும் ''ஏன்'' என்ற முத்தாய்ப்பு இல்லாமல் பேசமாட்டார். உதாரணம்வேண்டுமா? இதோ!

''என்ன சார்! இன்றைக்குக் காலேவேலையை முடித்துக்கொண்டு சாப்பிடும்போது மணி 10 ஆகி—விட்டது. ஏன்? அதுசரி. நீங்கள் கேட்டபோது 5 அணுவுக்குக் கொடுக்கமாட்டேன் என்றுனே அந்தப் பயல், அதையே என்னிடம் 4 அணுவுக்குக் கொடுத்தான், ஏன்? நான் உத்தியோகத்தில் இருந்தகாளில் ஒரு குமாஸ்தாவையும் இம்ஸிக்கமாட்டேன். ஏன்!'' இதுபோலவே ஒவ்வொருவாக்கியத்தின் இறுதியிலும் முற்றுப்புள்ளிக்குப் பதில் 'ஏன்' என்றபதம் இருக்கவேண்டுமென்பது அவரது எண்ணம் போலும். இவரைக் கண்டால் மறையாமல் என்னதான் செய்யமுடியும்?

2

மற்றொரு நண்பரை அறிமுகம் செய்விக்கிறேன் பாருங்கள்.

'என்ன சார்- கதை எழுதராப்லே இருக்கு! வந்திருக்கே எந்தப்பத்ரிகைக்கோ? வந்திருக்கே, இன்றைக்குப் பேப்பர்லே

என்ன சார் சமாசாரம். கொரியாவிலே வந்திருக்கே அப்படி செய்துட்டானே. அதுசரி. வந்திருக்கே நீங்கள் கும்பகோணம் போனா என் வீட்டிலே வந்திருக்கே விசாரித்துண்டு வரமுடியுமா' இதுபோல் மனிதர் அடிக்கடி வந்து பிராணனை வாங்குவார். அப்பேர்ப்பட்ட பழக்கம் அவருக்கு வந்திருக்கு என்று எண்ணிக் கொண்டு சும்மாயிருக்க வேண்டியதுதான்.

3

என் ஆசிரியர் ஒருவரையும் கேட்கிறீர்களா? இதோ:

'வந்து சார், நேற்று உங்கள் வீட்டுக்கு வந்தேனா? பிறகு கடைக்குப் போனேன். என்ன நான் சொல்றது புரிஞ்சுதா? என்ன விலை சொன்னான் தெரியுமா? சுத்த பி. எம் சார். ஐந்து ரூபாயாம். என்ன' நான் சொல்றது—புரிஞ்சுதா' என்பார். அவர் சொல்வதுதான் சிறு பையன்களுக்குக்கூடப் புரியுமே! அப்புறம் புரிஞ்சுதாவென்று என்ன கேள்வி? என்ன நான் சொல்வது புரிஞ்சுதா உங்களுக்கு?

4

இதோ மற்றொன்று: 'என்ன சார் உலகம் வேண்டிக் கிடக்கு? 'பட், ஆனால் தர்ம நியாயப்படி நடப்பவர்களுக்குக் குறைவில்லை என்று சொல்றாளே! 'பட், ஆனால் அதுவும் பொய் தான் பாருங்க சார்! எனக்கு எவ்வளவு வருஷ சர்வீஸ்? பட், ஆனால் நேற்றுவந்த அந்தப் பயலுக்கு மேனேஜர் லிப்ட் கிடைத்திருக்கு! 'பட் ஆனால் மேலே இருக்கானே ஒருவன்' அவனுக்கு எல்லாம் தெரியும் விட்டுத் தள்ளுங்கள் குப்பை"

5

இவைகளை விட இன்னும் ஒருபடி உயர்ந்த ரகம் ஒன்று இருக்கிறது: எங்கள் தெருவில் இருக்கும் ரிடயர்ட் மாஜிஸ்ட்ரேட் வீட்டிற்கு நேற்று முன்தினம் சென்றபொழுது அங்கு கண்ட வேடிக்கை என்னை பிரமிக்கச் செய்தது:—

'சார்' என்று கூப்பிட்டுக்கொண்டு வீட்டில் நுழைந்தேன் பதிலே இல்லை ஆனால் உள்ளே பேச்சுக்குரல் கேட்கவே உள்ளே எட்டிப் பார்த்தேன்; கூடத்தில் ஒரு நாற்காலியும் அதற்கெதிரில் ஒரு மேஜை, மேஜைத்துணி அடுக்குப் புத்தகங்கள் மைக்கூடு இத்யாதி உபகாரணங்களுடனும் இருந்தது. சற்று தூரத்தில் பழைய முனிஸிபல் குப்பைத்தொட்டி ஒன்று

நாற்காலியில் கிழவர் தலைப்பாகை, கோட்,டை, முதலிய உடுப்புகளுடன் மிடுக்காக உட்கார்ந்திருந்தார். இவைகளைக் கண்டவுடன் இன்னும் நன்றாகப் பதுங்கி இருந்துப் பார்க்கத் தொடங்கினேன். குப்பைத் தொட்டி இருக்கும் பக்கம் நோக்கி "ஏனப்பா! நீ அந்தக் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை என்பதை நிரூபிக்கத் தக்க ருசு காண்பிக்கமுடியுமா?" என்றார்

பிறகு சில நிமிஷ நிசப்தம்; உடனே, ஓஹோ! அப்படியா? அப்படியானால் அவன் உன்னை வெட்ட வந்தான் என்றாயே, அப்பொழுது என்ன மணி இருக்கும் என்று சொல்லமுடியுமா?

"........"

"என்ன மாலை 5 மணியா? அப்படியானால் நீ கையில் கடிகாரம் கொண்டு சென்றாயா?

"........."

"என்ன உத்தேசமாகவா! எப்படியப்பா அவ்வளவு சரியாகச் சொல்ல முடியும்! அப்படியானால் எனக்கு என்ன சம்பளம் இருக்குமென உத்தேசமாகச் சொல் பார்ப்போம்

"........"

"என்ன தெரியாதா? இது சொல்லத்தெரியாத உனக்கு மணிமட்டும் எப்படிச் சொல்லத்தெரியும். சுத்தப் பொய். யாருடா அங்கே பங்கா! ஆகையினாலே பிரதிவாதியின் தரப்பில் தக்கருசு இல்லாததாலும், முன்னுக்குப் பின் முரணாக பேசுவதாலும் நான் சட்டபூர்வமாக அவனுக்கு"......என்று அவர் ஜட்ஜ்மெண்ட் சொல்லிக் கொண்டே வரும் பொழுது நான் சிரிப்பை அடக்க, அடக்க, முடியாமல் 'களுக்' என்று சிரித்துவிட்டேன்.

ஜட்ஜ்மெண்ட் அதோடு நின்றதோடல்லாமல் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் விழுந்தடித்துக்கொண்டு வாசற்புறம்ஓடிவந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு போய்விட்டார்.

விஷயத்தைப் புரிந்து கொண்ட பிறகு என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை இதைக் கேட்ட அக்கம் பக்கத்தவர்கள் 'நீர் இன்றுதான் பார்க்கிறீர் போலிருக்கிறது'. எங்களுக்கு இது சகஜம்; இப்படித்தான் மாதத்திற்கு இரண்டு தடவையாவது நடக்கும்: நாடகம்முடிந்தபிறகு ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்தவர்கட்கு ஏற்படும் திருப்தி அவருக்குஏற்படும் என்றனர்!

6

இத்தனை தூரம் எழுதினேனே, எனக்கு என்ன பழக்கம் என்று அறிய உங்களுக்கு அதிக ஆவல் இருக்கிறது போலிருக்கிறதே, நீங்கள் கேட்காவிட்டாலும் உங்கள் முகங்கள் கேட்கின்றனவே! அவசியம் சொல்லத்தான் வேண்டுமோ! வெட்கமாக இருக்கிறதே...பாவாக இல்லையா! சரி எனக்கு, நான் எழுதிய கட்டுரைகள், கதைகள், கவிதைகள் ஒன்றிலும் பிரசுரமாகாமல் நான் வைத்தனுப்பிய தபால் தலைகளுடன் வெவ்வேறு ஆசிரியர்களால் திருப்பி எனக்கே அனுப்பப்பட்டு அதோ அனாதைகளாக அந்தப் பழங்கூடையில் கிடக்கும் அவைகளைப் பொழுது போகாத நேரங்களில் நான் படித்து ஆனந்திப்பதுடன் அவைகளைத் திருப்பி அனுப்பிய ஆசிரியர்களுக்கு அர்ச்சனை செய்வதில் தான்எனக்கு அலாதிப்பிரியம்! அதுதான் என் பழக்கமும் கூட: என்ன? ஏன்? நான் சொல்றது சரிதானே? என்ன? புரிஞ்சுதா? பட் ஆனால் என்னை மறந்து விடாதீர்கள், வரட்டுமா? நமஸ்காரம்!

# மேனாட்டுத் தத்துவம்

ஓர் இரவு பனி மழைபோல் பெய்து கொண்டிருக்கிறது. ஓர் அறையில்—விளக்கொளி படர்ந்த ஓர் அறையில்—ஓராயிரம் நாக்குகளை நீட்டி எரிகின்ற நெருப்பண்டை சிலர் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றனர். எங்கிருந்தோ சூழ்ந்துள்ள இருட்டிலிருந்து ஒரு பறவை புறப்பட்டுப் பலகணி வழியாய் அறைக்குள் சிறகடித்து வருகின்றது. பிறகு மற்றொரு பலகணி வழியாய் இருட்டில் மீண்டும் மறைந்து விடுகின்றது. அங்கே குளிர் காய்கின்றவர்களில் கற்பனை நிறைந்த ஒருவன் 'இதுதான் வாழ்வு' என்கிறான்.

இப்படி ஓர் ஆசிரியர் வாழ்க்கையைச் சித்திரிக்கிறார். இதில் எத்தனை பெரியதோர் உண்மை பொதிந்துகிடக்கின்றது பாருங்கள் வாழ்வெல்லாம் இரண்டு இருட்பிழம்புகளுக்கிடையே மின்னல் அடித்து மறையும் ஒளியோ என்று சொல்லும்படி இருக்கின்றது.

எங்கிருந்து வருகின்றோம், எங்கே போகின்றோம் என்ற விஷயத்தை நாம் ஓர்ந்திலோம். உளம் சொல்—இவைகளைக் கடந்து நிற்கின்றது வாழ்க்கையின் மர்மம்: அதன் ரகசியம் நம் சிந்தையைக் குழம்பும்படிச் செய்கின்றது.

நீரிற் குமிழிவாழ்வு: மின்னின் நிலையில் மன்னுயிர் யாக்கைகள்—என்றெல்லாம் மனிதன் புலம்புகின்றான். இப்படி அழிகின்ற நிலையில் ஓர் அழியாவாழ்வுக்கு இடமுண்டோ? என்ற சர்ச்சையுஞ் செய்கின்றான்.

கடவல்லியில் நசிகேதஸ் இதே கேள்வியைத்தான் எழுப்புகின்றான். சில பேர்கள் மரணத்திற்குப் பிறகு வாழ்வு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்; வேறு சிலர் இல்லை என்கிறார்கள் அதன் உண்மையாதோ? அதை அருள வேண்டும் என்று மரணத்தை உசாவுகின்றான் அவன்.

வாழ்க்கையின் இன்னல்களையும் கசப்புக்களையும் பொறுக்க மாட்டாமல் தற்கொலைசெய்து கொள்ளலாம் என்று ஹாம்லட்டுக்குத் தோன்றுகின்றது. ஆனால் மரணத்திற்கு அப்பாலுள்ள வாழ்வு இதைவிடக் கோரமாயிருந்தால் என்ன செய்வது என்று தயங்குகின்றான்.

இப்பொழுது ஒரு சாரார் சில சோதனைகள் செய்து வருகின்றனர். இறந்தவர்கள் மூலம் பேசுகின்றார்களாம். ஆலிவர் லாஜ் மாண்டுபோன தம்மகனோடுசம்பாஷித்ததாக அவரேகுறிக்கின்றார்: இது ஒரு சித்தப்பிரமம். தம்மையே ஏமாற்றிக் கொள்ளுகிறார் பலர் என்று அவர் கண்ட அனுபவத்தின் மீது பழியையும் சுமத்துகின்றனர்.

இராமானுஜத்தோடு பேசிக் கணக்கில் எழுந்த சந்தேகங்களையும் சிக்கல்களை அறுத்துத் தெளிவடைந்ததாக ஒரு நண்பர் என்னிடம் சொன்னார்: என் உதட்டில் என்னை அறியாமல் ஒரு முறுவல் அரும்பத் தொடங்கிற்று. அதை மிகச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன்.

ரசல் இவர் போன்ற வேறு பௌதிக சாத்திர நிபுணர்களும் மரணத்தோடு வாழ்வு நின்றுவிடுகின்றது என்று கருதுகின்றனர். தெய்வம் மறுமை—இவைகளை மறுக்கின்ற கட்சியினர் அந்நாட்

டிலும் இருந்தனர், இருக்கின்றனர்; இந்நாட்டிலும் தோன்றினர், தோன்றியிருக்கின்றனர்.

ஆனால் அப்பனே, நல்லது செய்தவன் கெட்டாபோய்விடுவன் என்று கண்ணன் கூறுகின்றான். இறந்துபோனால் என்ன? இப்பொழுது நீ அப்பியசித்த யோகம் உன்னைத் தொடரும்; நீ ஒரு யோகியாய்ப் பிறப்பாய் அல்லது ஒரு யோகியின் குலத்தில் பிறப்பாய் என்று தேறுதல் சொல்லுகிறான் அம்மாயோன். இதில் உண்மையிருக்கிறதா? வெறும் ஆறுதல் மொழிதானா? நான் இல்லாத நாளில்லை. இப்பொழுது இருக்கிறேன்; பிறகும் இருப்பேன்! என்றெல்லாம் அக்கூத்தன் கூறுகின்றான்.

மேனாட்டில் வேட்ஸ்வொர்த் (Wordsworth) பிரவுனிங் (Browning) முதலிய கவிகள் மறு பிறப்பில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆனால் ஒன்றுமட்டும் நம் மனத்திற்குச் சமாதானம் அளிக்கவில்லை: ஆத்மா இறக்கவும் இல்லை, பிறக்கவும் இல்லை என்று சொல்லுகின்றார். ஆனால் இறப்பு பிறப்பு அந்த அந்த ஆத்மாவுக்குச் சரீரம் ஏற்படுவானேன்? அநாதியான கர்மாதான் இதற்குக் காரணம் என்று புகல்கின்றனர். பரமாத்மா ஒன்றே; மற்றதெல்லாம் தோற்றமென்று சாற்றுகின்றனர் வேறு சிலர். இதற்குக் காரணம் யாதெனவினவுவீராயின் அதற்கும் பதில் மாயை என்ற குரல் எழும். மாயை, கர்மா என்ற சொற்களுக்கு எனக்கு விளங்கவில்லை என்றதுதான் பொருளாகும்.

இவர்களுக்கிடையே எழும் சண்டைகளையும் சர்ச்சைகளையும் நோக்கினால் வாதப்போர் செய்கிறவர்களுக்கு உண்மையான ஞானம் உதயமாயிருக்கிறதா? என்ற சந்தேகம் நம் மனத்தகத்தே எழுகின்றது.

மாயா வாதம் புதிதன்று: சங்கரர் புதிய வாதத்தை எழுப்பவில்லை. கௌடபாதர் இயம்பிய கருத்தை இவர் முறைபடுத்திச் சொல்லுகின்றார். மேனாட்டிலும் பிரபஞ்சம் ஆத்ம ஒளியை மறைத்து விடுகின்றது என்ற கருத்துடைய ஞானிகளும் தோன்றியிருக்கின்றனர். கிரேக்க நாட்டுப் பார்மினிடீஸ் (Parmenides) உலகம் தோற்றம் என்கிறார். பர்க்கிலி (Birkley) பார்க்கிறவனுக்குப் புறம்பாக உலகமில்லை என்கிறார். பிளேக் (Blake) பிரபஞ்சம் ஆத்ம ஒளியை மறைத்து விடுகிறது என்று கூறுகின்றார். ஷெல்லி ஆத்ம தூய ஒளிச்சுடரை உலகமாம் பல வர்ணக் கண்ணாடிக் கோபுரம் மாசு படுத்தி விடுகின்றது என்று செப்புகின்றார். எமர்சன், எட்வர்ட் கார்ப்பெண்டர், ஆபர் கிராம்பி, அல்டோஸ் ஹக்சிலி முதலியோர் நம் நாட்டு வேதாந்தக் கருத்துகளைப் போற்றி, அவைகளின் உண்மைகளை ஆராய்கின்றனர்.

கிரேக்கரிடமிருந்தே எல்லாம் தோன்றின என்று மேனாட்டார் கருதுகின்றனர். கீழ் நாட்டிலுள்ள கருத்துக்கள்கூட அங்கிருந்து வந்தன என்று சாதிக்கின்றனர். இராமாயணக் கதை கூட இலியத்தைத் தழுவியது என்று சிலர் மொழிகின்றனர்! ஆனால் நம் நாட்டுக்கதைக்கும் அந்நாட்டுக்கதைக்கும் அடிப்படையான எத்தனையோ பெரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

நம்நாட்டுக்கதை அறத்தில் நிற்கிறது: சிறையிருந்தவள் ஏற்றத்தைச் சித்திரிக்கிறது. அங்கே ஹெலன் கற்பை இழந்துவிடு

கின்றாள், அதைப்பற்றி அவர்களுக்குக்கவலை இல்லை; இழந்துபோன பொருள் போலத்தான் அவள் காட்சி அளிக்கின்றாள். சொத்தாம், உரிமையாம், ஹெலனுக்காக அவர்கள் போர்புரிகின்றனர்! நம் பெருங்காப்பியத்தில் கற்பே களிநடனம் புரிகின்றது; கற்பே வடிவாயுள்ள அத் தெய்வ நங்கைக்காக அவர்கள் சமர்புரிகின்றனர்.

நிலத்தியல்பால் சூழ்நிலையால் எல்லாம் திரியும் என்பதற்குச் சந்தேகமில்லை. இதிகாசத்திலும், புராணத்திலும் அந்நிலை தோன்றுகின்றது.

இலியத் ஆரம்பத்தைக் கவனிப்போம். அக்கிலிசின் அழற் சீற்றத்தைப் பாட அருளுக அம்மே என்று ஹோமர் கலைத் தெய்வத்தை இறைஞ்சுகின்றார்.

**பாடுக நீ அம்மே யவ் வக்கிலிஸின் பழஞ் சினத்தை**
**நீடுபுகழ்ப் பிலியஸின் சேய் நெடுஞ்சினத்தான் யவனர்கள்**
**வீடரிய துயர் விளைத்து வீருயிர் பலியிட்டு [பால்**
**நாடியநாய் கழுகுகட்கே நல்விருந்திட்டது காணாய்.**

ஆனால் எல்லாக் குணங்களும் நிறைந்தவன் யார் என்று வால்மீகி கதையைத் தொடங்குகின்றார். மேனாட்டில் இந்த அழற் சீற்றம் இன்னும் அவிந்த பாடில்லை. இருபது ஆண்டிற்கொரு முறை அது காட்டுத் தீயைப் போலக் கிளம்பி உலகத்தைச் சுடுகாடாய் ஆக்கி விடுகின்றது.

மேலும் மேனாட்டார் இயற்கையோடு போராட ஆரம்பித்து விட்டனர். நம்நாட்டில் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளுக்குக் குறைவில்லை. அக்காரணம் பற்றியே மனம் புறத்தை நாடவில்லை, அகத்தை நாடிற்று. இத்தகைய நிலை நம்முடைய செயல்கள், காப்பியங்கள். நாடகங்கள் இவைகளில் பிரதிபலித்துவிட்டது. இயற்கையோடு உறவு கொண்டாடினோம்; இயற்கையோடு ஒன்றாய்ப்போனோம். 'சுகா' என்று வியாசர் விளித்தபொழுது 'ஏன்' என்று மரங்கள் பதில் அளித்தனவாம். அந்நாட்டில் இயற்கையை ஒரு பகைவன் எனக்கருதி அதன்மீது ஆணை செலுத்தத் தொடங்கிவிட்டனர்; இயற்கையும் அவர்கள் மீதுதன் பழியைத் தீர்த்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது. தாங்கள் கண்டுபிடித்த சக்திகளுக்கே அவர்கள் அடிமைகளாகிவிட்டனர்.

விசுவாமித்திரர் நிலையில் அவர்கள் இருக்கின்றனர். அத்திரங்கள் பயனில்லை, அணுகுண்டுகளால் பயனில்லை, அன்பின் வழியேவழி, அருளின் வழியே வழி என்று வசிஷ்டர் நிலையில் நிற்கிற நம் வேதாந்தத்திற்கு அவர்கள்வரத்தான் போகப் போகின்றனர். அதற்கு வேண்டிய சின்னங்கள் தெரிகின்றன. தீர்கதரிசிகளும் தோன்றி விட்டனர்.

மேனாட்டார் புறத்திலிருந்து அகத்துக்கு வருகின்றனர், நாம் அகத்திலிருந்து புறத்துக்கு வருகின்றோம். புன்புல வழி அடைத்தால்தான் அகம் திறக்கும். அகவொளியைக் கொண்டேபுறத்தை ஆராயவேண்டும். ஆற்றோடு போவது எளிது; வாழ்க்கையாம் ஆற்றை எதிர்த்து அதன் மூலத்தைக் கண்டு பிடித்து விட்டால் புறத்திலுள்ள ரகசியங்கள் சட்டெனப் புலப்படும். புறத்திலே திரிவதால் பயனில்லை என்று நம் தபோதனர்கள் கண்டுவிட்டனர்.

மேலும் சுவர்க்க நரகங்கள்கூட நிலத்தியல்பால் திரியும். பாலைவனத்திலிருப்பவன் சுவர்க்கத்தை நீர்வளம்மிக்க நாடென்று

வர்ணிப்பான். வெட்டு குளிரில் துன்புறுகின்றவன் இன்பச் சூரிய வெப்பம் மிகுந்த நாடென்றுதான் கருதுவான் I received you WARMLY என்ற வாக்கியத்தை நம் தமிழில் மொழி பெயர்ப்பதாயிருந்தால் மனங்குளிர வரவேற்றேன் என்று தான் சொல்ல வர வேண்டும்.

கருத்துக்கள் ஒன்ருய்க் காணப்படுகிற காரணத்தால் இவை அந்நாட்டிலிருந்து வந்தவை என்று சொல்லுவதற்கு இடமில்லை. ஒரு பெரும் நாகரிக வெள்ளம் ஓரிடத்திலிருந்து எங்கும் பாய்ந்திருக்கலாம்; அல்லது அந்நாட்டிலேயே தனியாய்த்தோன்றியிருக்கலாம். மனம் எல்லோருக்கும் பொதுவாயுள்ள ஒரு பெரும் கடலன்ருே? ஒரு நிலையில் நின்ருல் பிளேட்டோபோல் நாமே சிந்திக்கக்கூடும் என்று எமர்சன் கூறுகின்ருர். உதாரணமாக:

**ஒன்றை நினைக்கின் அதுவொழிந் திட்டொன்ருகும்**
**அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்**

'நல்வழி'யில் உள்ள இந்தப்பாட்டின் கருத்தே ஷேக்ஸ்ப்பியர் எழுதிய ஹாம்லெட்டில் பார்க்கிருேம். "There is a special Providence in the fall of a sparrow. If it be now, it's not to come; if it be not to come, it will be now; if it be not now yet it will come; the readiness is all." (Hamlet. Act V. Scene II.)

கருத்தொற்றுமையை வெகு தெளிவாக ஆல்டோஸ்ஹக்ஸிலி தம் Perennial Philosophy அழியாத்தத்துவம் என்ற நூலில் ஆராய்கின்ருர். அடிப்படையாய் ஒரு ஜீவநதிபோல் ஒருபொதுத்தத்துவம் ஓடுகின்றது; அதைக் கண்டு பிடித்து விட்டால் தத்துவம் என்பதற்கு இலக்கணம் வகுக்கலாம். அது வரையில் அதற்கு முழு இலக்கணம் வகுக்க முடியாது. மேனட்டில் தத்துவ விசாரம் செய்கிறவர்கள் நம்முடைய நாட்டுத் தத்துவம் கலப்பற்ற தத்துவமன்று, மதமும் கொள்கைகளும் கலக்கின்றன என்று சொல்லுகின்றனர். பரப்பிர்மத்திலிருந்து எல்லாம் நெருப்புப் பொரிகள் போலத் தோன்றின என்று சொல்லுகின்றனர். அதன் அவசியத்தை உவமைகளாலும் உருவகங்களாலும் வர்ணிக்கிருர்களே தவிர அதை உள்ளவாறு சொல்லவில்லை என்ற பழியை நம் தத்துவத்தின் மீது சுமத்துகின்றனர்.

நம் புல்லறிவைக் கொண்டு அதை அளக்க முடியாது. நம்மைத் தக்கபடி அமைத்துக் கொண்டால் நம் செவிகள் கூர்மையானல் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கிற அந்தத் தத்துவங்கள் நம் செவிகளில் ஒலிக்கும். வேதத்திற்குச் சுருதி என்ற பெயர் வந்ததற்கு காரணம் இதுவே.

மேலும் அது ஒருவராலும்எழுதப்படவில்லை என்றுசொல்லுவதற்கு இதுவே காரணம் என்று கூறலாம். நியுடன் தோன்றுவதற்கு முன்பே பூமிக்கு இழுக்கும் சக்தி இல்லாமலில்லையே.

நம் தபோதனர்கள் சொல்லுகிறது உண்மைதானு? என்று அறிவதற்கு அவர்கள் நடத்திய சோதனைகளை நம் ஆத்ம ஆராய்ச்சிச்சாலைகளில் நடத்திப் பார்க்கவேண்டும்.

இது நிற்க... தத்துவம் என்ருல் என்ன? மேனுட்டார் கொண்டதை ஆராய்வோம்.

(தொடரும்)

# முப்பது வருடங்களில்

பழமொழிகள் நம் நாட்டின் செல்வம். சின்னஞ்சிறிய வடிவிலே அமைந்த இலக்கியச் செல்வம் என்றும் சொல்லலாம். ஆலம் விதையானது மிகப் பெரிய விருட்சத்தைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருப்பதுபோல் மிகப் பெரிய கருத்துக்களையெல்லாம் தனக்குள் ஒளித்து வைத்துக்கொண்டிருப்பவைகள் தான் பழமொழிகள். கதாசிரியர் ஒரு பக்கம் எழுதித் தெரிவிக்கவேண்டிய ஒரு விஷயத்தை ஒரு பழமொழி தன் வீச்சினுல் சீக்கிரம் விளங்க வைத்துவிடுகிறது. எழுத்தாளர்களிடையேயும் சரி, நாட்டு நடவடிக்கைகளிலும் சரி, அரசியல் பிரசினைகளிலும் சரி—வீட்டுப் பழமொழிகள் கருத்தைத் தெரிவிக்க உதவுவதுபோல் வேறு எதுவுமே உதவி செய்வதில்லை. பழமொழிகளும் அந்தந்த நாட்டிலே பேசப்படும் மொழியிலேயுள்ள வழக்குச் சொற்களும் தான் நாட்டின் மொழியை வளம் செய்கின்றன. இது நமது மொழிக்கு மட்டுமல்ல, எல்லா மொழிகளுக்குமே பொருந்தும்.

பிரசித்திபெற்ற ஹிந்தி ஆசிரியர்களான பிரேம்சந்த், சுதர்சன் முதலியவர்களது வசன நடையைப் பற்றிப் பேசும்பொழுது அவை மிகவும் அருமையான பழமொழிகளுடன் கூடிய நடை "முகபரேதார்சைலி'' என்று புகழப்படுகிறது. நம் நாட்டிலும் மிகப் பழமையான காவியங்களிலும்கூட ஆங்காங்கேபழமொழிகள் நிறைந்திருப்பதிலிருந்து பழமொழிகள் அந்த மகா காவியங்களின் காலத்திற்கும் முற்பட்டவை என்றும் கால வெள்ளத்திலே மிதந்து வந்தவைகளையே கவிஞர்கள் கையாண்டிருக்கிறார்கள் என்றும் ஆராய்ச்சியில் வல்லுநர்கள் கருதுகின்றனர். இப்படி நம் நாட்டிலே பழமொழிகள் பன்நெடுங்காலமாக அமர காவியமாக வாழ்ந்து வருகின்றன.

"முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை. முப்பது வருஷம் கெட்டவனுமில்லை.'' என்று பேசுகிறது ஒரு பழமொழி. இதன் கருத்தென்ன? இது தாழ்ந்து போனவர்களைத் தன்னம்பிக்கையை இழக்காமலிருக்கும் பொருட்டு செய்யத் தோன்றியிருக்கிறது. நம்பிக்கையினுல் எத்தனையோ செயல்களில் வெற்றி பெறமுடியும். எல்லையற்ற நம்பிக்கையின் பயனுக அற்புதங்கள் நடைபெறுவதையும் நாம் கண்டிருக்கிறோம். ஆகவே சிரம தசையிலுள்ளவர்கள் தன்னம்பிக்கையை இழந்து சோர்ந்துவிடாமலிருப்பதன் பொருட்டே இந்தப் பழமொழி எழுந்திருக்கவேணும். இதேபோல "மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று.'' இது அளவறிந்து செலவு செய்யாமல் எவ்வளவு கிடைத்தாலும் செலவு செய்யும் உதாரியைக் கண்டிக்கும் முறையிலே எழுந்தது. இப்படி முப்பது என்ற எண்ணைப்பற்றி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். பொதுவாக நம் நாட்டிலே முப்பது வருடங்களை ஒரு தலைமுறை என்று குறிக்கிறோம்.

⁂ ⁂ ⁂ ⁂

கடந்த முப்பது வருடங்களைத் திரும்பிப்பார்த்தால் நமக்கே ஆச்சரியமாயிருக்கிறது. அரசியலிலே ஏற்பட்டிருக்கும் மாறுதல் தான் எத்தனை?! இலக்கிய உலகிலே மாறுதல்கள் எத்தனை?! மனிதனது வாழ்க்கைத்தரத்திலே தோன்றிய மாறுதல்கள்

எத்தனை ?! மக்களது மனநிலையில் தோன்றிய மாறுதல்கள் எத்தனை ?! இவைகளையெல்லாம் பார்க்கும் பொழுது நாம் ஆச்சரியப்படுவது தகுமென்றே தோன்றுகிறது.

அரசியலிலே தோன்றிய மாறுதல்கள் நம் பாரத தேசத்தின் சரித்திரத்திலே பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கவை. சுதந்திரப் போரின் மிகமிக முக்கியமான பகுதி கடந்த முப்பது வருஷங்கள் தான். இராபர்ட் கிளைவ் முதல் ஆராய்ச்சி செய்பவர்களுக்கும், ஜான்ஸி ராணியின் சரிதம் தொடங்கிப் பேசுபவர்களுக்கும் இது முக்கியமல்லாத வருஷங்களாகத் தோன்றலாம். ஆனால் அடிமைகளாயிருந்த நாம் சுதந்திரம் என்னும் கனியைப் பெற்றது இந்த நாட்களிலே தானே? பாபூஜீ அவர்களின் அஹிம்சை யென்னும் மாபெரும் சக்ராயுதத்தின் துணை கொண்டு கத்தியின்றி இரத்தமின்றி நடைபெற்ற இந்தச் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றது எப்பொழுது? இதன் தொடக்கம் எப்பொழுது? என்று ஆராயப்புகுந்தால் முப்பது வருடங்களில் என்றே சொல்லலாம். நாடு சுதந்திரமடைந்த இந்தத் தலைமுறை பொன்னே போல் போற்றத் தகுந்தது தான், சந்தேகமென்ன?

அரசியல் ஒரு புறமிருக்கட்டும். இலக்கிய உலகிலே பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பொற் சரடாக நின்ற பாரதியாருக்குப்பின் இலக்கியத்தின் மறுமலர்ச்சிதான் எத்தனை வேகமாக முன்னேறியிருக்கிறது. இலக்கியப் பூஞ்சோலையிலே மலர்ந்திருக்கும் பத்திரிகைகள் தான் எத்தனை ? நவீனங்கள் தான் எத்தனை? சிறு கதைகள் தான் எத்தனை? இவைகளின் வளர்ச்சியையும் தரத்தையும் நோக்க இந்த முப்பது வருஷங்களைப் பொற்காலம் என்று கூடச் சொல்லிவிடலாம் என்று தோன்றுகிறது. தமிழ் வளர்ந்து வளம் பெற்றிருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகள், சுயமரியாதைக் கட்சி, இவைகளெல்லாம் அரசியலில் எப்படியிருந்தாலும் தம்மையறியாமலேயே தமிழுக்கு மிகச்சிறந்த பணிமைச் செய்திருக்கின்றன. கிராமவாசிகள் பலரும் எழுத்தறிவு பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல முறையிலே மரியாதையுடன் அழகிய மொழியிலே பேசப்பழகி யிருக்கிறார்கள். தமது எண்ணங்களை நல்ல முறையிலே நல்ல மொழியிலே சொல்லும் திறன் பெற்றிருக்கிறார்கள். இளைஞர் கூட்டங்களிலே அறிவு செழித்து வளர்ந்திருக்கிறது. கண்டபடி துர்பாஷையினால் ஒருவரையொருவர் திட்டிக் கொள்வதில்லை. இப்படித் தெரிந்தும் தெரியாமலும் பல்வேறு துறைகளிலும் புரட்சிகரமான மாறுதல்கள் தோன்றி செழித்தோங்கி நிற்கிறது இன்றைய இலக்கிய உலகம்.

∴ ∴ ∴

இலக்கியம் வாழ்க்கையிலிருந்து பிறக்கிறது. வாழ்க்கையை வளம் செய்கிறது என்றுதான் பலரும் நினைக்கிறோம். ஆனால் இலக்கியத்தை உண்மையில் வளர்த்தவை சமய நூல்கள் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. நம் நாட்டு இலக்கியத்தின் மாபெரும் சிறப்பு இதுதான் எனலாம். பிறமொழிகளிலே இலக்கியத்தின் பொருட்டு இலக்கியம் பயிலலாம். மதத்திற்கும் இலக்கியத்திற்கும் ஒருவிதமான தொடர்புமில்லை. ஆனால் நம் இலக்கியங்களை அப்படிப் பிரிக்க முடியாது. சிறந்த காவியங்கள்

வேண்டுமா? சமயமின்றி நடவாது. கம்பராமாயணம், திவ்வியப் பிரபந்தம் இவைகளினிடையேதான் செல்லவேண்டும். இப்படி வாழ்க்கையையும் சமயத்தையும், இலக்கியத்தையும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாமல் பிணைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பிணைத்துப் பண்படுத்திய நெஞ்சங்களிலிருந்து தோன்றியவைதான் இன்றைய மறுமலர்ச்சி இலக்கியம் என்று நாம் போற்றும் உரை நடை இலக்கியங்கள்.

முப்பது வருடங்களுக்கு முன் பெண் கல்வியானது நாட்டிலே இவ்வளவு தூரம் வெற்றியடையவில்லை. பெண்களுக்கென்று தனிப்பட்ட முறையிலே தேவைக்குத் தகுந்ததும் சூழ்நிலைக்கு ஏற்றவைகளைத் தேர்ந்தெடுத்து மக்களது மனதில் பதியச் செய்யக்கூடியதுமான பத்திரிகைகள் ஒன்றுமே கிடையாதென்று சொல்லலாம். பெண்கள் முன்னேற்றம் கருதி ஒரு சகோதரி ரேவு தாயாரம்மா என்பவர் "பெண் கல்வி" என்ற ஒரு பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். ஏறக்குறைய இதே சமயத்தில் 'மாதர் மனோ ரஞ்சினி', 'சக்கிரவர்த்தினி' என்ற இரு பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. இவைகளுள் சக்கரவர்த்தினி என்பது விக்டோரியா மகாராணியாரின்மீதுள்ள அன்பினால் ஒரு சீர்திருத்தவாதி அவர் பெயரையே தமது பத்திரிகைக்கும் வைத்தார். இவ்விரண்டும் மிகக் குறைந்த விஷயங்களை எளிய முறையிலே எழுதி வந்தன. இவைகளுக்குப் பின் வித்யா விஹாரிணி என்ற பெயருடன் ஒரு பொதுவான பத்திரிகையும் வெளியிடப்பட்டது. முற்குறித்த இரண்டு பத்திரிகைகளையும் விட இது சற்றே உயர்ந்த நடையில் வடநாட்டு விஷயங்கள், பிறநாட்டு நல்லறிஞர் கதைகள் இவைகளோடு வெளிவந்து மக்களது மனதைக் கவர்ந்தது. இந்த சமயத்திலே ஆடவர்கள் ஆங்கிலமே உயர்ந்தது என்று கருதியபடியால் இந்தப்பத்திரிகைகள் பெரும்பாலும் பெண்களுக்கென்றே கருதப்பட்டது. மேலும் இந்தப் பத்திரிகைகள் வடமொழிகலந்த தமிழிலும் சிற்சில கட்டுரைகள் பண்டிதத் தமிழிலுமாக வெளி வந்தன.

இவைகளுக்குச் சற்றேறக்குறைய இதேமாதிரி வடமொழி கலந்த தமிழிலே பண்டிதை விசாலாக்ஷி அம்மாள் என்பவர் ஹித காரிணி என்ற பத்திரிகையைத் தொடங்கினர். அதில் நாட்டு நடப்பு நீங்கலாக அவரது நாவல் அல்லது சிறு கதைகள் மட்டுமே வெளி வந்து கொண்டிருந்தன.

ஏறக்குறைய இதற்குச் சில வருஷங்களுக்கு முன்தான் விவேக சிந்தாமணி, விவேக போதினி முதலியவைகளும் தோன்றின. விவேக சிந்தாமணி என்னும் மாதப் பத்திரிகையிலேதான் B. R. ராஜமய்யர் அவர்கள் தமது "கமலாம்பாள் சரிதை"யை எழுதி வெளியிட்டார். இதன் ஆசிரியரான ஸ்வாமிநாதய்யர் என்பவர் ஒரு யோகி, வேதாந்தி, ஆகவே பத்திரிகை பொது நோக்காக இன்றி ஒரே வரட்டு வேதாந்தமும் முரட்டுக் கொள்கைகளுமாக நிறைந்து மக்களுக்குப் புதிராக ஆகிவிட்டது! அதில் மக்கள் விரும்பிப் படித்தவை சீதா அல்லது இல்லற வாழ்க்கை' இதுவும் இராஜமய்யருடையதே. நடுவிலே நின்று போயிற்று. பிறகு பத்திரிகை செழித்து ஓங்கவில்லை.

விவேக போதினி என்ற மாத வெளியீடு மட்டும் பிறகு பல வருஷங்கள் நன்றாய் நல்ல முறையிலே வெளிவந்து கொண்டிருந்தது. பிரசித்திபெற்ற வடநாட்டு ஆசிரியர்களின் நாவல்களையும் வெளியிட்டது. B. R. இராஜமய்யர் அவர்கள் எழுதிய "உண்மை உயர்வு அல்லது வஸுதேவ சாஸ்த்திரி" என்ற அற்புதமான தொடர் கதை வெளிவந்து ஆயிரக் கணக்கான மக்களை இன்ப சாகரத்தில் ஆழ்த்தியது. இது முடியுமுன்னரே அவரது மறைவு நேரிட்டது. இதனால் அன்றுமுதல் இன்றுவரை அவரது நோக்கத்திற்கு இணங்க அந்தக் கதையை ஒருவராலும் தொடர்ந்து எழுதமுடியவில்லை. ஒருவர் ஏதோ எழுதிமுடித்தார். ஆனால் அது ஒட்டவைத்த பகுதியாகவே விளங்குகிறது. இப்படியாக விவேக போதினி இருந்தவரையில் பெயரும் புகழுமாக வாழ்ந்தது.

இதே சமயத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள சில அறிஞர்கள் ஒன்று கூடி நல்ல முறையிலே உயர்ந்த நடையிலே உயர்ந்த காகிதம் கட்டுக்கோப்பு முதலியவைகளுடன் கூடிய ஒரு மாதப்பத்திரிகை மிகச் சிறந்த முறையிலே கண்களைக் கவரும் வண்ணம் வெளிவந்தது. அதே சமயம் S. G. இராமானுஜலு நாயுடு அவர்கள் தமது "பிரஜானுகூலன்" பத்திரிகையையும் நடத்திவந்தார். அது எளிய முறையிலிருந்தது. இந்த வாணீ விலாசினியோ மிகவும் கம்பீரமாக ஒரு அரசிபோல் காட்சியளித்தது. ஷேக்ஸ்பியரது "காமெடி ஆப் எர்ரர்ஸ்" போன்ற நாடகங்களும் "இராணி எலிஜபெத்தின் மகள்" என்பது போன்ற சரித்திர சம்மந்தமான நாவல்களும் [இது பின்பு கற்கோட்டை என்ற பெயருடன் ஆனந்த போதினியில் வெளிவந்தது.] வடமொழியின் சாயல் மிகுந்த உயர்ந்த நடையிலே வெளிவந்தன.

இவைகள்மட்டுமின்றி சங்கரர், இராமானுஜர், மத்வர்போன்ற மகான்களின் சரிதைகளுடன் மிகச் சிறந்த ஓவியங்களுடன் வெளிவந்து கொண்டிருந்தன. இது மட்டுமேயன்றி வடமொழிக்கும், தமிழ் மொழிக்கும் ஒருங்கே பணி செய்யும் நோக்கத்துடன் வடமொழியிலே யுள்ள சியாமளா தண்டகம், சிவானந்த லஹரி போன்ற நூல்களைத் தமிழிலேயும், கம்பனது சரசுவதி யந்தாதி, இலட்சுமியந்தாதி முதலியவைகளையும் தலபுராணங்களையும்மாதப் பத்திரிகைக்குரிய நாட்டு நடப்பு, அரசியல் செய்திகள், தாதாபாய் நௌரோஜி, ஆனந்த மோகன் போஸ் போன்ற வீரர்களது சரிதைகள் இவைகளையும் வெளியிட்டு வந்தது. அப்பொழுது அதற்கு நிகராக வேறெந்த மாதப்பத்திரிகையும் இருக்கவில்லை. இதன்பின் பத்திரிகைகளின் வளர்ச்சி திடீரென்று குறைந்தது.

இதே சமயத்தில் கைத்தொழில் செய்வோருக்குப் பயன்படும் வண்ணம் பிழைக்கும் வழி, விவசாய தீபிகை முதலியவைகளும் J. R. ரங்கராஜு, அவர்களது கிருஷிகன் என்னும் பத்திரிகை, ஆனந்தபோதினி முதலியவை வெளிவந்தன. இவைகளுள் பிழைக்கும் வழி பின்னர் தனது பெயரை 'ஜனாபிமானி' என்று மாற்றி வைத்துக்கொண்டது. அமிர்த குணபோதினி என்றொரு பத்திரிகை வெளிவந்தது. ஆனால் இவைகளுள் எதுவும் பெண்களுக்கென்று தனிப்பட்ட முறையிலில்லை, எல்லாம் பொதுவாகவே தானிருந்தன.

மகரிஷி V. V. S. ஐயரைப் பற்றித் தமிழ் நாட்டாருக்கு அறிமுகப் படுத்த வேண்டிய அவசியமில்லை. அவரது, புகழும் தியாகமும், மொழிப்பற்றும் பிறர் கண்டு வியந்து போற்றத் தக்கவை. புதுவையிலே பாரதியாருடன் கூடிவாழ்ந்தவர் அவர், பாரிஸ்டராக திரும்பவேண்டிய அவர் போலீஸாருக்கு அஞ்சி கப்பலிலேயே மாறுவேடம் பூண்டு தப்பி வந்ததை நினைத்தாலே திடுக்கிடச்செய்யும்: அத்தகைய வீர சிங்கம் அவர். தேச முன்னேற்றங் கருதி சேரமாதேவியிலே தமிழ்க் குருகுலம் ஒன்று நிறுவினார். கம்ப ராமாயணத்தின் பெருமையைத் தமிழ் உலகிற்கு உணர்த்திய பெருமை இவரையே சேரும். வடமொழியிலும் மற்றும் பிரெஞ்சு மொழியிலும் தேர்ந்த பல்மொழிப் புலவரான இவர் தமது குருகுலத்தின் வெளியீடாக பாலபாரதி என்ற ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கினார். கவியோகி சுத்தானந்தர், மகேச குமார சர்மா, இவர்களைப் போன்ற பெரியவர்களது கதைகளும் கட்டுரைகளும் கவிதைகளும் அதிலே வெளிவந்தன. மறுமலர்ச்சி இலக்கியப் பணியிலே பாரதியாருக்கு அடுத்த ஸ்தானம் இவருக்கு உண்டு. இவரது அரும்பெரும் பணியை வெகு சீக்கிரத்திலேயே இழக்க நேரிட்டது தமிழ் நாட்டின் துர்பாக்கியமே.

இதன் பின்னர் சகோதரி V. பாலம்மாள் என்பவர் ஏறக்குறைய முப்பது வருஷங்களுக்கு முன்னர் சிந்தாமணி என்ற மாதப் பத்திரிகையைப் பெண்களுக்கென்றே தனிப்பட்ட முறையில் தொடங்கினார். பல பெண்மணிகளை எழுத்தாளர்களாக்கவும் முயற்சி செய்தார். இவரது சிந்தாமணி மிகச் சிறந்த முறையில் ஐந்து ஆண்டுகள் பணி செய்தது. இதில் முதன்முதலாக எழுதத் தொடங்கிய பலர் இன்று எழுத்தாளர்களாக விளங்குகிறார்கள். அன்றியும் மகாராஷ்டிர பாஷையிலுள்ள மனோரஞ்சன் முதலிய பல பத்திரிகைகளை யெல்லாம் வரவழைத்து ஸ்ரீமதி பி. மங்களாபாய் என்பவர் மூலம் பலஉயர்ந்த கதைகளையெல்லாம் தமிழ் நாட்டுக்கு அளித்தார். இந்த அருமையான பத்திரிகை நின்று போகும்படி நேர்ந்தது நமது துரதிருஷ்டந்தான்.

இப்படியாகக் கடந்த முப்பது வருடங்களில் இலக்கியம் முன்னேறி யிருப்பதற்குக் காரணம் இப்படித் தோன்றி மறைந்த பத்திரிகைகள் தான். இந்த ஆசிரியர்கள் உழுது பண் படுத்தி உரமிட்டு வைத்த நிலத்திலே தான், பிற் காலத்தில் தோன்றிய பல பத்திரிகைகளும் செழித்து வளர்ந்திருக்கின்றன. ஆகவே இன்றைய வளர்ச்சிக்கு இவைகளே மூலகாரணம்.

ஒரு ஆசிரியர் இளம் எழுத்தாளன் ஒருவனைப் பார்த்துக் கூறுகிறார் "மகனே! எழுதி எழுதிக் கிழிக்கும்படி நேரிடுகிறதே என்று கவலை யுறாதே. அது கலைமகளின் அடிகளுக்குச் செய்யும் அர்ச்சனைகள்" என்றார். ஆனால் உண்மை அதுவல்ல. செடிகளிலிருந்து வாடி, உதிரும் இலைகள் அதற்கே உரமாகி அழகிய பூங்கொத்தாக மலர்கிறது என்றே நமக்குத் தோன்றுகிறது. அதேபோல கடந்த முப்பது வருடங்களாக, முன் தோன்றிய ஆசிரியர்கள் இட்ட இந்த உரம்தான் இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் வற்றாத ஊற்றுப்பேற்றிலிருந்து அருமையான கற்பனை மலர்களைத் தோற்றுவிக்கிறது என்பதில் சந்தேகமென்ன?

(தொடரும்)

# ஒரு அபூர்வ நடராஜ விக்ரகம்

[“கலைச்செல்வர்” ஸ்ரீ. வை. மு. நரஸிம்மன், Consulting Architect and Chartered Engineer அவர்களைப்பற்றி நமது வாசகர்களுக்குப் புதிதாய் அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. ஏற்கெனவே நமது விசேஷ மலர்களில் பலமுறை அரிய ஆராய்ச்சிகளை வெளியிட்டு மோகினி அன்பர்களுக்குப் பெருவிருந்தளித்திருக்கிறார். இவ்விதழ் முதல் தொடர்ச்சியாக அவரது வியாஸங்கள் ஓவிய அணியுடன் வெளியாகி நம்மைக் குதுகலத்திலாழ்த்தும்—ப-ர்.]

*

இவ்விதழின் மேலட்டையை அலங்கரிக்கும் புகைப்படத்தில் காணும் அபூர்வ நடராஜர் விக்ரகமானது தஞ்ஜாவூர் ஜில்லா தருமபுரம் ஆதீனத்தின் மேல்பார்வையிலுள்ள வைதீச்வரன் கோவில் ஸ்ரீ வைத்யநாதஸ்வாமி ஆலயத்திலுள்ளது. எவ்வளவுதான் எழுத்துமூலம் வர்ணித்தாலும் அதன் அழகை நேரில்பார்த்து அனுபவிக்கும் ஆனந்தம் அதில் வராது என்று சொல்லத்தேவையில்லை.

விக்ரகத்தின் அமைப்புகளையும் அம்சங்களையும் ஆராயுங்கால் அது பிந்திய சோழ காலத்தியது—அதாவது 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று புலப்படுகின்றது. இதன் பீடத்தில் காணப்படும் விசேஷ அம்சங்களாவன: தமிழ் இசைக் கருவியான “குடமுழா” வைப்போன்ற ஒரு



ஷை விக்ரகத்தின் பின்தோற்றம்



குடமுழா



183175

"பஞ்சமுக" வாத்யமும், அதை வாசிக்கும் (நான்கு கைகள் கொண்ட) ரிஷி ஒருபுறமும், எதிர்ப்புறம் வீணை வாசிக்கும் (இருகைகள் கொண்ட) ஒரு ரிஷியும்—ஆக இரண்டு ரிஷிகளும் இசைமூலம் இறைவனை நாடுகின்றனர்; பெருமானோ ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து ஆடுகிறார். ஸர்வம் சங்கீத மயமாயிருக்கிறது!

ஷெ இரு ரிஷிகளும் முறையே ப்ருங்கியும் நாரதருமாக விருக்கலாம். ஏனெனில், ஆகம சாஸ்திரப்படி நடராஜரின் வலது பக்கம் பத்ரகாளியாவது அல்லது ப்ருங்கி மஹரிஷியாவது இருக்கவேண்டும். சாதாரணமாக இசை கைங்கர்யத்தில் தும்புருவும் நாரதரும் ஒன்றாக ஈடுபடுவது வழக்கம். ஆனால் இங்கு ஷெ ஆகமப்படி, வலதுபுறம் ப்ருங்கியும் இடதுபுறம் நாரதரும் இவ்விக்ரகத்தின் பீடத்தில் காணப்படுகின்றனர்; தும்புருஇல்லை. சில்ப சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள வர்ணனைப் படியே காணப்படுகின்றனர் இரு ரிஷிகளும்: அதாவது, சாந்தி தவழும் வயோதிகம், ஜடாமகுடம், தாடி, பத்மபீடம், யக்ஞோபவீதம் தரித்திருத்தல் இத்தியாதி.

ஷெ கோவிலுக்கு மூன்றுமைல் மேற்கே திருப்பனையூர் ஸ்ரீ சிவலோகநாத ஈச்வரர்கோவிலில் ஏறக்குறைய இதே போன்ற ஓர் விக்ரகம் ஆராதனையிலுள்ளது.

புராதன இந்திய நாகரிகத்தில் நடனமும் சங்கீதமும் சகலமான தெய்வீக காரியங்களிலும் ப்ரதானமான அம்சமாக விளங்கின. ப்ரஹ்மா ரிக்வேதத்திலிருந்து பத்யத்தையும், ஸாமவேதத்திலிருந்து இசையையும், யஜுர் வேதத்திலிருந்து ந்ருத்யத்தையும், அதர்வண வேதத்திலிருந்து ரஸத்தையும் எடுத்து, ஐந்தாவது வேதமாக நாட்டியவேதத்தைச் சிருஷ்டித்து, பரதனுக்கு அளித்தாரென்றும், பிறகே நமக்கு பரத நாட்டிய சாஸ்திரம் கிடைத்தது என்றும் சொல்கிறார்கள். ந்ருத்ய சாஸ்திரத்தில் 108-பாவ அமைப்புகளில் ஒன்பது நிஜுசனைத்தான் நாட்டிய வேதம் விவரிக்கிறது.

அந்த ஒன்பதில் முதல் ந்ருத்யத்தை உருவாக்கியுள்ளது இந்த விக்ரகம். இது பாம்பை யணிந்து ஆடும் புஜங்க-லலித பாவனையைச் சித்திரிக்கிறது—ஆடும் பாதம் நிற்கும் காலின் முழங்காலைவிட உயர்விலிருக்கும் அமைப்பு, சில்பரத்னம், உத்தர காமிகாகமம் முதலியவற்றில் கூறப்படும் அம்சங்களின் படி அமைக்கப்பட்டுள்ளது.

முன் இடதுகை கஜஹஸ்த அமைப்பில் (யானையின் தும்பிக்கையைப்போன்று) இடமிருந்து வலமாகக் குறுக்கே யுள்ளது. பின் இடதுகை அக்னியைத் தாங்கியுள்ளது. முன் வலதுகை அபயஹஸ்த அமைப்பு. பின் வலதுகையில் டமருகம். வலதுகால் அபஸ்மார புருஷன் முயலகன் முதுகில் ஊன்றி நிற்கிறது; இடது கால்தான் தூக்கிய திருவடி, ஆடும் பாதம். சிலையில் வழக்கமாய் காணப்படும் ஜடையில்லை;

ஷை பீடத்திலுள்ள ப்ருங்கி, நாரதர்—பெரியதோற்றம்




நூதன சிறகு அலங்காரமேயுள்ளது. பின்புறம் மட்டும் எழு சுருண்ட ஜடை தொங்குவதுபோல் காணப்படுகிறது. அதன் மத்தியில் அடிபாகத்தில் ஒரு மண்டையோடும், ஒருபுறம் ஸர்ப்பமும் ஒருபுறம் பிரைச்சந்திரனும் காணப்படுகின்றன. ப்ரபை வட்ட வடிவமானது; மகர வேலைப்பாடுடையது. ஹாரங்கள், முக்யமாக ருத்ராக்ஷ ஹாரம் குறிப்பிடத்தக்க புதுமையுடன் பொலிகிறது. இவ்விக்கிரகத்தின் மேல் காணப்படும் கழுத்து அணிகள் எல்லாமே மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டவைவாக காணப்படுகின்றன; அவைகளுள் ஒன்றான ருத்திராக்ஷ அணி வெகு நீண்டதாயும், தொப்புளைத் தொட மார்பில் பிரகாசிக்கிறது. இடுப்புக்கட்டு வழக்கமாகக் காணப்படுவதுபோல், வலது பக்கத்தில் வளைந்தும் இடது பக்கத்தில் இரண்டு பிரிவாகவும் தொங்குகிறது, யக்ஞோபவீதம், உதர பந்தம், மோதிரங்கள், மணிக்கட்டுக்கு அணிகள் முதலிய அலங்காரங்களுடன் சிரித்த வதனத்துடன் காட்சியளிக்கிறார் ஆடும் பெருமான்.

மிதிக்கப்படும் அசுரனின் உடல் மூன்றிடங்களில் வளைந்து காணப்படுகிறது: அவன் முதுகில் பகவானின் பாதம் பதிந்துள்ள அமைப்பானது, நின்ற திருக்கோலத்திற்கே சரியான லீலையையளித்துள்ளது. அஸுரன் தனது இடதுகையில் ஒரு சர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு மேல்நோக்கி பகவானின் முகத்தைப் பார்ப்பதாக அமைந்துள்ளது. மயூரத்தைச் சுற்றிதான் இத்தகைய சிலையைக் காண்கிறோம்.

வீணை, பஞ்சமுகவாத்யம் இரண்டையும் இசைக்கும் ரிஷிகளின் அங்க அமைப்பு குறிப்பிடத்தக்கது. ஒன்றுக்கொன்று இழையும்படி வாசிப்பதாகத் தோற்றம். பஞ்சமுக வாத்யத்

துடன் எக்காளமும், தவலே சங்கும் சேர்ந்தோ, தனியேவோ வாசிக்கப்படுவதுண்டு.

இந்த நடராஜ விக்ரகத்தைப்போன்ற அபூர்வ சிருஷ்டிகள் இந்தக் காலத்தில் உருவாக்கப்படுவதில்லை; எங்கோ மடங்களிலோ, கோவில்களிலோ தனிப்பட்டவர்களிடமோ, இருப்பது தெரியாமல் இருக்கின்றன. அவற்றின் உண்மை மதிப்பு அறியாதவர்கள் அவற்றை அலக்ஷியமாகப் போட்டு வைக்கிறார்கள், அல்லது அற்ப விலைக்கு விற்கிறார்கள், அல்லது புது சிருஷ்டி செய்ய உருக்குகிறார்கள். அறிந்தோ அறியாமலோ செய்யப்படும் இத்தகைய காரியம் சட்டப்படி நிறுத்தப்படவேண்டும். இத்தகைய விக்ரகங்கள் நமக்குச் சரித்திரத்தை விளக்கப் பெரிதும் உதவும் சின்னங்கள். அவை சிற்பச் செல்வம் மாத்திரமன்று; நம் நாட்டின் பண்பைவிளக்கும் அருட்பெருஞ் செல்வமும்கூட! அவற்றைச் சட்டப்படி பாதுகாப்பது தேசிய சர்க்காரின் கடமையாகும். வருங்காலத்தினருக்கு இவ்விலைமதிப்பற்ற நிதிகளைப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டாமா? [தமிழாக்கம்: வை. மு. ஸ்ரீ.]

# பாலர்மோகினி

## விளையாட்டும், விபரீதமும்

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

சாயங்கால சிலுசிலுப்புக்காற்றில் ஜனங்கள்உல்லாசமாய் போய்க்கொண்டிருந்தார்கள். நாள் பூராவும் ஜெயில்போல் அடைக்கப்பட்டிருந்த குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டதும் ஒருவர்மேல் ஒருவராய் விழுந்தடித்துக்கொண்டு ஓரேகுதூகலமாய் ஓடிவந்தார்கள்.

டேய்...டேய் சோமு! என்னேடு கொஞ்சம்வாடா, நான் அவஸரமாய் ஒருகடைக்குப் போகவேண்டும், வா, வா! என்று ஸ்ரீதரன் சோமுவின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுஓடினன். சோமு எவ்வளவு சாக்குப்போக்குச் சொல்லியும் ஸ்ரீதர் கேட்கவே இல்லை.

ஸ்ரீதர் சற்று துடுக்கான சுபாவம் உடையவன்; என்னவானுலும் சரி சண்டையானுலும் சரி, துணிச்சலாய் இறங்கிவிடுவான். ஆனல் சமாளிக்கும் சக்தியும் உண்டு. அவன் துஷ்டத்தனத்திற்கு ஏத்தாப்போல் நல்ல புத்திசாலியும் கூட. அதனுல்தான் சோமு அவனிடம் அடங்கியே வருவான். ஸ்ரீதருக்கு ஒரு பாடம் தெரிந்தால் அதை தன் வகுப்புப் பையன்

களுக்குப் பூராவும் நன்றாய்ச் சொல்லிக்கொடுப்பான். தான் மட்டும் படித்து வகுப்பில் முதன்மையாய் இருக்கவேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அதனால் வகுப்புக் குழந்தைகள் பூராவும் அவனிடம் அன்பாகவே இருப்பார்கள்.

இருவரும்ஒரே ஓட்டமாய்கடைவீதியை அடைந்தார்கள்; ஸ்ரீதர் ஒரு கடையருகில் சென்று, ஐயா...கவண்டுகல் ஒன்று கொடுப்பா என்று கேட்டான். சோமுவைத் தூக்கிவாரிப் போட்டது.

சோமு:—ஐயோ. ஸ்ரீதர் அது எதற்குடா, அது பக்ஷிகளை ஹிம்ஸை செய்து கொல்லும் கருவியல்லவா. பாவம்டா. வாங்காதே வா! என்று கூப்பிட்டான்.

ஸ்ரீதர்:—அட போடா முட்டாள், நான் மாத்திரம் ஜீவ ஹிம்ஸை செய்வேனு என்ன. இது வேறு ஒருகாரியத்திற்காக: வாடாபேசாமல்! என்று நடந்தான்; சோமுவும் பதில்பேசாது வீடுவந்தான். மறுநாள் சனிஞாயிறு சேர்ந்ததால்ஸ்ரீதரன்பாடு கொண்டாட்டமாய் விட்டது.

ஸ்ரீதர் சனிக்கிழமை சாயங்காலம் சோமுவையும் அழைத்துக்கொண்டு மாந்தோப்புக்குள் நுழைந்தான். பாருடா எதற்கு வாங்குகிறாய் என்று கேட்டாயே, ஜீவ ஹிம்ஸை செய்வதற்குஇல்லை, காந்திஜீ பிறந்தநாட்டில் நான் ஜீவஹிம்ஸைக்கு துணிவேனுடா. மாங்காய் அடிக்கத்தான் வா, ஜோராய் அடித்துத் தின்னலாம்.

சோமு:—ஏண்டா ஸ்ரீதர்! இந்த மாதிரி வஸ்துக்களை வாங்க உங்க ஆத்தில் பணம் தருவார்களாடா? கவண்டுகல்லை பார்த்தால் திட்டமாட்டார்களா?

ஸ்ரீதர்:—ஆமாம் இதற்குப்போய் அவர்களைப் பணம் கேட்கவேண்டுமா. ஓசைப்படாமல் அப்பா ஜோபியில் கால் ரூபாய் எடுத்தால் அவருக்கு என்ன கணக்கா தெரியப்போகிறது? கவண்டுகல் வேண்டும் என்றால் அவர்கள் கட்டாயம் வாங்கித் தரமாட்டார்கள். பணம் கேட்டால் எதற்கு என்று காரணம் சொல்லி ஆகவேண்டும். நியாயம் அநியாயம் பார்த்துக்கொண்டு இருந்தால் ஆசைஎன்று நிறைவேறும்? போடா! அது எல்லாம் நான் லக்ஷியம் செய்யமாட்டேன். நீ ஒரு கோழை, திருடினால் பாவம், பொய் சொன்னால் பாவம் என்று அடித்துக்கொள்வாய். பெரியவர்கள் படி, படி, என்பதைத் தவிர ஒரு ஆசையும் நிறைவேற விடமாட்டார்கள் என்று சோமுவை வாயே திறக்கவிடாதுபேசி,குறிவைத்து மாங்காய் அடித்தான்.

ஒரு குறியில் இரண்டு காய்கள் வந்து விழுந்ததும் இருவரும் குஷியாய்க் காயைச் சுவைத்துச் சாப்பிட்டபிறகு இருவரும் எந்த காயை அடிக்கலாம் என்று மாம்பூராவும் தேடினார்கள். உச்சியில் நன்றாய்ப் பழுத்த மாம்பழத்தைப் பார்த்த

ஸ்ரீதர் குஷியாய் ஒரு குதிகுதித்து, அதோ பாருடா, ஃபஸ்ட் க்ளாஸ் பழம்! என்று கல்லை விட்டான்.

எட்டாக்கனியாயிருந்த அந்தப்பழம் ஸ்ரீதரனின் பொறுமையை நன்றாகச் சோதித்தது. குறிவைத்து அடித்து அவன் கையும் சோர்ந்துவிட்டது. ஆனால் பழம் விழுந்தபாடு இல்லை. சோமுவுக்கு தான் அடித்தால் ஒருவேளை விழுமோ என்று தோன்றியதால் கவுண்டுகல்லை வாங்கி, சரியாய்க் குறிவைத்து அடித்தான். ஒரே அடியில் இரண்டு பழங்களாய் வந்து விழுந்ததைப் பார்த்த சோமு, ஸ்ரீதர் இருவரும் நிதி கிடைத்தது போல் ஒரே ஓட்டமாய் பழம் விழுந்த இடத்தைத்தேடிச் சென்றார்கள்.

அங்குபோய்ப் பழத்தைப்பார்த்ததுதான் தாமதம்; இருவரும் தீயைமிதித்தவர்கள்போல் ஒரு துள்ளு துள்ளினார்கள்: மாம்பழத்தோடு ஒரு அழகான பச்சைக்கிளியும் கல்லால் அடிபட்டு விழுந்து துடிப்பதைப் பார்த்து இருவரும் நடுங்கிவிட்டார்கள். சிறு வயது முதல் ஒரு சிறுதப்புக்கூட செய்யாத சோமு தன்கையால் ஒரு கொலையே செய்துவிட்டது அவனால் தாங்கமுடியாது பெரிதாய் அழவே துடங்கிவிட்டான்.

ஆனால் ஸ்ரீதரனுக்கு அவ்வளவு தூரம் பாதிக்கவில்லை: அடபோடா பைத்தியக்காரா! கிளிக்காக அழுகிறானும்! அது அல்பாயுஸு, சாகிறது! இது இருந்து யாரைக் காப்பாற்றப் போகிறது? வாடா மாம்பழத்தை எடுத்துக்கொண்டு போகலாம்! என்று கூப்பிட்டான். கல்நெஞ்சு படைத்த ஸ்ரீதரனைப் பார்த்து சோமுவுக்கு ஆச்சர்யமாய்விட்டது; கிளியைவிட்டுப் பிரிய மனமில்லாது அதன் அருகில் கல்லாய் உட்கார்ந்துவிட்டான். ஸ்ரீதர் சற்றுநேரம் இருந்துபார்த்தான்; சோமுவா வழியே இல்லாது மாம்பழத்தை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான்!

டேய், டேய், ஸ்ரீதர் ஓடாதே! நம்மை அடித்தால் நாமும் இப்படிதானேடா துடிப்போம்! கிளியானால் என்ன, நாய் ஆனால் என்ன! புழுவானால் என்ன! எல்லாவற்றிற்கும் உயிர் ஒன்றுதானேடா! வாடா, எப்படியாவது இதைக் காப்பாற்ற வழிசெய்யலாம் என்றான்.

ஸ்ரீதர்:—போடா பைத்தியக்காரா, போகும் உயிரைப் பிடித்து வைத்துக்கொள்ள நீபகவானா? வாடா, வீடுபோய்ச் சேரலாம்! என்று சோமுவை எதிர்பார்க்காது வீடுபோய்ச் சேர்ந்தான்.

ஒன்றும் தோன்றாது சோமு கிளியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான்: சட்டென்று ஒரு யோசனை தோன்றியது: நேராய் "வெடரினரி" ஆஸ்பத்திரியை அடைந்தான். அங்கு டாக்டரிடம் தான் அடித்ததாய்ச் சொல்ல வெட்கமாயும், பயமாயும் இருந்ததால் துணிந்து பொய் சொல்லவும் தீர்

மானித்தான். டாக்டரிடம் வந்து, இந்த கிளி வழியில் அடிபட்டு விழுந்து இருந்ததாயும், இங்கு எடுத்து வந்தால் காப்பாற்றலாம் என்று எடுத்து வந்ததாயும் பொய் சொன்னான்.

டாக்டரும் சோமுவின் தயாளகுணத்தை மெச்சி கிளியை வாங்கிப் பார்த்தார். சிறகில் அடி கொஞ்சம் பட்டு இருந்ததால் உயிர்ப் பயம் இல்லை என்று தைரியம் கூறி மருந்து போட்டார். பிறகு நோயாளிப் பக்ஷிகள் வைக்கும் கூண்டில் அந்தக் கிளியை விட்டார். பிறகு தான் சோமுவுக்குச் சற்று த்ருப்தி ஏற்பட்டு மூச்சு சரியாய் வந்தது.

ஆனால் ஸ்ரீதர் மீது அதிகமான கோபம் வந்தது. அவன் துஷ்டன், அவனோடு சேராதே என்று அவன் பெற்றோர்கள் சொன்னதின் உண்மை அப்போதுதான் தெரிந்தது. அவனுடன் சேர்ந்ததின் பலன்தானே நான் ஒரு வாயில்லாஜீவனை ஹிம்ஸிக்கும் பாவம் செய்யநேர்ந்தது! என்று வருந்தி, தெரியாது செய்த பாவத்திற்கு மன்னிக்கும்படி பகவானை ப்ரார்த்தித்தான்.

ஸ்ரீதரன் சோமுவைத் தனியாய்விட்டு வந்துவிட்டானே தவிர, மனது என்னவோ சமாதானமாகவே இல்லை. சீ நான் கவண்டுகல் வாங்கியதனால் தானே அந்தக்கிளி இறக்கும்படி நேர்ந்தது! என்று ஒருபக்கம் தோன்றியது... ஆமாம், எப்படியும் இன்று அந்தக்கிளி சாகவேண்டும் என்று இருந்தால் செத்துத்தானே போகப்போகிறது? என்மேல் என்ன தப்பு? என்றும் தோன்றியது. இப்படி மூளையைக் குழப்பிக்கொண்டே வீடு வந்தான்.

வீட்டுக்குள்ளே நுழைந்த உடனே அவன் அங்கு பார்த்த காட்சி அவனைக் கதிகலங்கச் செய்தது. அவனுடைய உயிரான டாமி என்னும் நாய் துள்ளித்துள்ளி கத்திக்கொண்டு இருந்தது. சுற்றி அவன் தாயார், அக்கா முதலியோர் அதைச் சமாதானம் செய்கிறார்கள். சின்ன தம்பி, தங்கை அழுகிறார்கள். இதைப் பார்த்ததும் ஒன்றும் புரியவில்லை. அவனுடைய சிறிய தம்பி ஸ்ரீதரைப் பார்த்ததும் அண்ணா... அண்ணா ஓடியா! நம்ப டாமியைத் தேள்கொட்டிவிட்டது. அழுகிறது, வா...வா... என்று கத்தினான்.

இதற்குள் அவன் தாயார் நாயை எடுத்துக்கொண்டு ஸ்ரீதருடன் ரிக்ஷாவில் “வெடரினரி” ஆஸ்பத்திரிக்கு சென்றாள். ஸ்ரீதருக்கு, நாய் அவஸ்தைப்படுவதைப் பார்க்கும் பொழுதெல்லாம் அந்தக்கிளியே கண்முன்பு வந்து, அடபாவி இப்பொழுது அருமை தெரிகிறதா? உன் நாய் என்றால் ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறாயே! என்னைப் பரிதவிக்கச் செய்ததால் பகவான் உன்னைப் பழிக்குப்பழி வாங்குகிறார். கல்நெஞ்சக்காரா! என்று சொல்வதுபோல் இருந்தது. அடுத்தாற்போல் சோமுவின் வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தது. “டேய் ஸ்ரீதர்! யாரானால் என்ன? நாயானாலும், கிளியானாலும், புழு

'வானாலும் உயிர் ஒன்றுதானேடா. வா, காப்பாற்ற வழி செய்யலாம்!'' என்று சொல்வதுபோல் இருந்தது.

இதற்குள் ஆஸ்பத்திரி வந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை. தாயார் கூப்பிட்ட பிறகே அதை உணர்ந்தான். அப்போது தான் கிளியைக்கொண்டு விட்டுத் திரும்பும் சோமு ஸ்ரீதரனைப் பார்த்து ஓடி வந்தான். சோமுவைப் பார்த்த ஸ்ரீதரன் ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டு அழுதான். சோமு கிளியை இங்கு கொண்டுவந்து விட்டு சிகிச்சை செய்ததையும், பிழைத்துவிட்டது என்ற செய்தியையும் தெரிவித்தான். பிறகுதான் ஸ்ரீதரின் மனம் நிம்மதியாயிற்று.

சோமு! நான் நிர்த்தாக்ஷிண்யமாய்க் கிளியை நிராகரித்து வந்ததால் தான் பகவான் என் அருமை நாயை இந்த கதிக்கு ஆளாக்கி விட்டார். சரி வா. என் நாய் பிழைக்குமா என்று டாக்டரைக் கேட்கலாம் என்று ஓடினார்கள். அதற்குள் நாய்க்கு ஊசிகள் குத்தி உள்ளுக்கும் டாக்டர் மருந்து தந்ததால் சுய உணர்வு பெற்று நாய் ஸ்ரீதரனைப்பார்த்து ஓரே பாய்ச்சலாய் பாய்ந்து அவனைக்கட்டிக் கொண்டது.

அப்பொழுதுதான் ஒரு ஜீவனை நாம் ஹிம்ஸித்தால் அது வருந்தி நம்மை எவ்வளவு சபிக்கும் என்ற உண்மை தெரிந்தது. அதே சமயம் காந்தீஜீயின் அஹிம்ஸா உபதேசங்களின் உண்மை தெரிந்தது: தான் செய்த தப்புக்காரியத்தைத் தாயாரிடம் சொல்லாமல் இருக்க மனது துணியவில்லை. உடனே தன் தாயார், டாக்டர் இருவரிடத்திலும் முதலில் இருந்துதான் தகப்பனார் ஜேபியில் காசுதிருடியது முதல் இப்பொழுது ஆஸ்பத்ரி வரும்வரை நடந்த சகலமான விஷயத்தையும் மூச்சு விடாது சொல்லி, தாயாரிடம் மன்னிப்புக் கோரினான்.

சோமு டாக்டரிடம் பொய்சொல்லி இருப்பதால் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் விழித்தான்; சட்டென்று ஓடி டாக்டர் கைகளைப்பிடித்துக் கொண்டு, டாக்டர்! என்னை மன்னியுங்கள்! நான்தான் அடித்தேன் என்று சொல்ல தைரியம் இல்லாததால் துணிந்து பொய் சொன்னேன்! ஆனால் வேண்டும் என்று கொல்லவில்லை என்றான். டாக்டரும் ஸ்ரீதரனின் தாயாரும் கதை கேட்பதைப்போல் கேட்டார்கள்.

இருவரும்பெரிய தப்பு செய்தாலும் தாங்கள் செய்தது தப்பு என்று உணர்ந்து வருந்திவிட்டதால் அவர்களை கோபிக்கவில்லை. அவர்களை சமாதானம் செய்து பல புத்திமதிகளை எடுத்துச்சொன்னார்கள். டாக்டர் இருவரையும் பாராட்டி, நாயோடு சேர்த்து கிளியையும் வளர்க்கும்படி ஸ்ரீதரனுக்குக் கிளியைப் பரிசாகத் தந்தார். இருவருக்கும் மன்னிப்பு பெற்ற பிறகுதான் மனது சாந்தி அடைந்தது.

இப்போது சோமுவும் ஸ்ரீதரனும் தங்கள் படிப்பையே கண்ணாய் நினைத்து நன்றாய்ப் படித்து ஒழுங்கான மாணவர் என்ற பெயரை எடுத்துள்ளார்கள்.

# சுதந்திரப் பறவை

## வை.மு.கோ. 107 - வது நாவல்

### 8

அதுவரையில் அந்த மூலையில் ஒட்டிக்கொண்டு நடுநடுங்கியபடியே பார்த்தவாறு நின்ற முத்து, புஷ்பாவை அடித்துத் தள்ளியதைக் காணச் சகியாமல் கண்கலங்கிக் கதறியபடியே! ஐயயோ! அக்காவை அடிக்காதே, அடிக்காதே! என்று கத்துகிறானே யன்றி எதிரில்வந்து தடுப்பதற்கு பயந்துபோய்த் துடிக்கிறான். ஒரே ஓட்டமாக உள்ளே ஓடிச்சென்று தன் பிதாவிடம் இங்கு அண்ணன் மூலம் நடந்தது, அக்கா மூலம் நடந்தது, புஷ்பாவை அடித்துத் தள்ளியிருப்பது ஆக எல்லாவற்றையும் மடமடவென்று ஒப்புவித்து சீக்கிரம் வாருங்கள் என்று கத்தினான்.

உடனே அவன் பிதா எழுந்து ஓடிவந்தார். இதற்குள் கருணாவும் அவளுடைய சினேகிதைகளும் ஒரே விசையாய் வீதியில் இறங்கிச் செல்வதைப்பார்த்தார். பாவம் இளம் தளிர்போன்ற புஷ்பாவின் கண்கள் நீரைச் சொரிகின்றன: ஏடாகூடமாகப் பிடித்துத் தள்ளிவிட்டதால் சடக்கென்று எழுந்திருக்கமுடியாமல் முக்கி முனகியவாறு எழுந்திருக்க ப்ரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கையில் முத்துவும் பிதாவுமாக வந்து புஷ்பாவைத் தூக்கினர்.

பாவம் புஷ்பாவின் உள்ளம் நெளிந்துபோய் ஒருபுறம் அவமானம், ஒருபுறம் பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதே. இன்னும் பணத்திற்கு வழியே இல்லையே என்ற ஏக்கம். இத்தனை உணர்ச்சிகளுடன் எழுந்தாள். அவள் உடம்பில் பட்டுள்ள ஊமை காயத்தின் நோவைக்கூட லக்ஷியம் செய்யாமல் உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு ஆவேசம் வந்தவளைப்போல் தந்தையைப் பார்த்து, "அப்பா! வருத்தப் படாதீர்கள். உலகமே ஒரு பயங்கரச் சுழல். அதில் மனித வாழ்க்கையின் தத்துவம் இன்னும் பயங்கரப் புயல். இத்தனையும் தாண்டி கரை ஏறுகிறவன்தான் சரியான உத்தமன், த்யாகி என்று உலகம் அவனைக்கொண்டாடும்! என்றுஎனது பாட புத்தகத்தில் வந்திருக்கும் விஷயத்தைப் படிக்கையில் அதன் உண்மையான ஜீவகளை ததும்பும் ஸாரத்தை உணரவில்லை. இப்போது நான் சின்னஞ் சிறுமியாயினும் பூர்ணமாக உணர்ந்துவிட்டேன்.

நீங்கள் உங்கள் மக்களால் ப்ரமாதமான நிலையை அடையப்போவதாகஎதிர்பார்த்ததற்குப் பதில் படுதோல்வியடைந்த வருத்தம் போதும். அத்துடன் வேறு விசனம் வேண்டாம்.

அப்பா! முதலில் அம்மாவைக் கவனியுங்கள். இந்த விஷயம் எதையும் அம்மாவின் காதுக்கு எட்டவிடவேண்டாம். முத்து! இதை நீ அம்மாவிடம் சொல்லாதே! நமக்குள்ள சகலவித மான கஷ்டத்திலும் நாம் படும் ஹிம்ஸைகளைச் சகிக்கலாம். அம்மாவைப்பரிகொடுத்துவிட்டால் நாமும்கூண்டோடு எங்காவது விழுந்து சாகவேண்டியதுதான் தெரிந்ததா! நீ கடவுள் மீது ஆணையாக அம்மாவிடம் சொல்லாதே. நாம் இவ் வருஷம் பரீக்ஷைக்கே போகவேண்டாம். பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளலாம். பெண்களைப் பெண்களாக வளர்க்காமல் பேய்களாக வளர்த்தால் பேய் என்ன செய்யும்? பேயாட்டந்தானே ஆடும். ஆடட்டும்! அந்தப் பேயையும் அடக்கி கொட்டத்தை வெட்டி ஓட்டுவதற்கு பகவான் ஒரு பூசாரியைநியமிக்காமலிருக்கமாட்டான். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வாருங்கள் அம்மாவிடம் போவோம். கண்டிப்பாய் ஒருவரும் இது விஷயத்தை அம்மாவிடம் சொல்லக்கூடாது. நினைவிருக்கட்டும்" என்று தேருதல் கூறிவிட்டு ஒரே ஓட்டமாக வள்ளியிடம் வந்தாள்.

ஏற்கெனவே இத்தனை குழந்தைகளைப் பெற்றதனாலும் அடிக்கடி பலமான நோய்வாய்ப்பட்டுத் தேறி இருப்பதனாலும் மிகவும் பலவீனப்பட்டுவிட்ட வள்ளிக்கு வறுமைப் பேய்ப் பிடித்து ஆட்டிய பிறகு மேலும் குன்றிவிட்டாள். தன் மக்களின்மூலம் ப்ரமாத ராஜபோகத்தை யடைந்து பசுமை வாழ்க்கை வாழப்போகிறோம் என்று அபாரமாய் எதிர்பார்த்துச் சகிக்கமுடியாத ஏமாற்றமடைந்து மனக் கோட்டை இடிந்து படுசூர்ணமாகிவிட்டபிறகு நடப்பதற்குக் கூட சக்தியற்று நோயாளியைப் போலவே ஆகிவிட்டாள். வீட்டுவேலைகளைச் செய்வதற்கும் அடியோடு சக்தி குன்றியது. புஷ்பா, சந்திரா, ஆகிய இருவரும் வேலை செய்வதால் சற்று சமாளித்துவந்தாள். அதோடு இன்று ஒன்றன் பின் ஒன்றாக நேர்ந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் மிகவும் கேவலமான நிலைமையில் படுத்துவிட்டாள்.

புஷ்பா வெகு அன்புடன் அன்னையின் பக்கத்திலமர்ந்து அணைத்தபடி, அம்மா! இதென்ன அதிர்ச்சியின் விளைவு. நான் எத்தனையோ வயது சிறுமி, நானு உனக்குச் சொல்வது. இம்மாதிரி விபரீதங்கள் எல்லாம் நடக்கும் என்பதை சாதாரணமான ஊாரே தெரிந்துகொண்டிருக்கையில் நீ ஏனம்மா எதிர்பார்க்கவில்லை. ஊரார் சொல்வதைக்கொண்டு நானே எதிர்பார்க்கையில் நீ எப்படி ஏமாறமுடியும். உன்னுடைய தலைவிதி இது. என்று தைரியமாய் மனந்தேறி இதுபோல் இன்னும் எத்தனை எத்தனை விபரீத புதைபாணங்கள் உண்டாகப்போகிறதோ அதற்கெல்லாம் தயாராக இருக்கவேண்டாமா! இப்போதே, இதற்கே உயிரைவிட்டுவிட்டால் கீழ்

ளைகளாகிய எங்கள் கதி என்னவாவது? எழுந்திரும்மா...... என்று பெரிய நூற்றுப்பாட்டியைப்போல் சொன்னாள்.

வள்ளி சற்று சமாளித்துக்கொண்டு மெல்ல எழுந்தாள். அதற்குள் புஷ்பா சிறிது நீராகாரத்தைப் பலவந்தமாகக் கொடுத்துக் குடிக்கச்செய்தாள்.

வள்ளியம்மாள்சற்று தேறியவளாய் புஷ்பாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, புஷ்பா! கண்மணீ! எனது இப்போதைய நிலைமையைப் பார்த்தால் என்னுயிர் நீங்கிவிடும்போலிருக்கிறது. மார்வலி தாளமுடியவில்லை. இத்தனை மக்களைப் பெற்ற பாவியாகிய நான் ஒரு பாதியை நானேகெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டேன்;ஒரு பாதியைக் காப்பாற்ற வகையின்றி, திக்கின்றி, அனாதைகளாய் நடுத்தெருவில் நாராயணா என்று விட்டுவிட்டுச் சாகப்போகிறேன் என்று தெரிந்துவிட்டது. உனக்கும் முத்துவுக்கும் பரீக்ஷைக்குப் பணங்கட்ட வழியில்லையே என்று அழுது அழுது துடித்த நான் உங்களை என்றென்றும் அழுதுதவிக்கும்படி விட்டுவிடும் நிலைமைக்குவந்துவிட்டேன். கண்ணா......ஐயயோ......நெத்தியில் இதென்ன காயம். ரத்தம் கசிந்துத்தோய்ந்திருக்கிறதே! என்று கூறுவதையறிந்த புஷ்பா திடுக்கிட்டாள். எங்கே தன்னுடைய உடம்பிலுள்ள மற்ற தழும்புகளும் தெரிந்துவிடுமோ என்ற பயத்துடன் கண்ணீர் பெருக, அம்மா! இதென்னம்மா ஏதேதோ உளறுகிறாய்! உனக்கொரு உடம்பும் இல்லையம்மா! நீ பயப்படாதே, இது ஒரு சோதனைகாலம்...அதே சோதனைதான் என் நெற்றியில் இடித்தது,' வேறொன்றுமில்லை அம்மா நீ வீண்கவலைப்படாதே, நாங்கள் இந்த வருஷம் பரீக்ஷைக்குப் போகப் போவதில்லை. படித்துப் பரீக்ஷை கொடுத்தவர்களெல்லாம் உங்களைக் காப்பாற்றிக் கரைசேர்த்துவிட்டது போதும். ஆதியில் அத்தை சொல்லியதுபோல் அறிவும் ஆற்றலும் உயர்ந்த லக்ஷ்ய குணங்களும் வ்ருத்தியாகி உதாரணப் பெண்களாயும், பிள்ளைகளாயும் வாழ்வதற்காகப் படிக்கும் படிப்பாயின் உபயோகப்படும். கொள்ளிக்கட்டையினால் தலையைச் சொரிந்துகொண்டதுபோல் படித்தப் படிப்பின் விபரீதப்போக்கில் நம்முடைய குடும்ப கண்ணியமே புதைந்து மண்ணோடு மண்ணாக மக்கிவிடவும் பிறர் கண்டு சிரிக்கவும் ஆய்விட்டது. ஆகையால் இனி எங்களுடைய படிப்பைப்பற்றியே நீ எண்ணாதேம்மா! படிக்காமலேயே இந்தக் குடும்பத்தைத் தாங்கி ரக்ஷிக்கும் சத்யார்க்கத்தை எப்படியாவது பகவான் கொடுத்து ரக்ஷிப்பார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாம் இனி இந்த ஊரிலேயே இருப்பதற்கு யோக்யதை இல்லை. நமக்கென்று பூர்வம் ஏதோ ஒரு சிறிய க்ராமம் இருந்ததாயும் நாகரீகக் குறைவென்று எட்டியே பார்க்காமல் பட்டணவாஸமே சொர்க்கவாஸம் என்று எண்ணி

விட்டதாயும் சொல்வாயே! அதே குக்ராமத்திற்கு நாம்போய் சேர்ந்துவிடுவோம். பிறகு பார்க்கலாம். மாதம் பிறந்தால் இத்தனை வாடகை கொடுப்பதற்கும் அகாத விலைவாசிகளில் சாமான் வாங்கிப் பிழைப்பதற்கும் இனி நமக்கு சக்தியில்லை. விஷயம் விஷம்போல் விபரீதமாகிவிட்டது. இனி தடை சொல்லாதே. நான் வயதில் மிகச் சிறியவளாயினும் காலத்தின் பரிதாபத்தை உத்தேசித்து இந்த சமயம் என் வார்த்தையைக் கேளுங்கள்! என்று முற்றுப் புள்ளிவைத்து, தானே விருவிரென்று பேசி முடித்தாள்.

தாயாரின் பதிலுக்கோ! தகப்பனாரின்தீர்ப்புக்கோ இவள் எதிர்பார்க்கவில்லை. முத்துவிடம் சொல்லி அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஆகாரத்தைக் கொடு. நான் சில முக்கிய காரியமாய் வெளியே சென்றுவருகிறேன் என்று கூறிவிட்டுச் சிட்டுக் குருவிபோல் பறந்து சென்றுவிட்டாள். வள்ளிக்குத் தன்னுடைய குடும்பத்தின் நிலைமையைப்பற்றி ஒன்றுமே புரியாது ஒரே குழப்பமாயும் புதிராகவும் தோன்றி வருத்தியது.

## 9

வீட்டிலிருந்து கிளம்பும்போதுதான் எங்கேபோகிறோம், என்ன செய்யப்போகிறோம், என்பதே புரியாது ஒரேவேகத்துடன் கிளம்பிய புஷ்பாவுக்கு இரண்டு வீதிகள் தாண்டி ஓடியபிறகு சடக்கென்று கால்கள் தடைபட்டு நிற்கச் செய்ததும் ப்ரேக்போட்டதுபோல் நின்றுவிட்டாள். அதற்குக் காரணம் அவளுடைய உபாத்யாயினி ரிக்ஷாவில் அந்தத் தெருக்கோடியில்வருவதைப் பார்த்துவிட்டதுதான். இன்னும் பள்ளிக்கூடம் போகாமல் எங்கே ஊர்சுத்துகிறாய் என்றும் இன்று பரீக்ஷைக்குப் பணம் கட்டவேண்டிய கடைசி நாளாயிற்றே அதற்குச் சித்தமாக வந்திருக்கிறாயா என்றும் கேட்பார்களோ! என்கிற பயம் உண்டாகிவிட்டதால் தயங்கி தயங்கி நிற்பதற்குள் ரிக்ஷா இவளைச் சமீபித்துவிட்டது.

இவள் பயந்ததுபோலவே, ‘‘என்ன புஷ்பா! மணி என்ன ஆயிற்று என்று தெரியவில்லையா! தலையும் வேஷமுமாய் எங்கே இப்படி போகிறாய்... அன்று நான் உன்னைக் கேட்டபடி உன் அக்காவுக்குக் கலப்பு மணமாகிவிட்ட செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். மிகமிக சந்தோஷம்: உங்கக்காவுக்கு கங்கராஜுலேஷன் கடிதம் எழுதிவிட்டேன்; சரிதான். பள்ளிக்கூடத்தில் பேசிக்கொள்வோம், சீக்கிரம் வந்துசேரு! என்று உபாத்யாயினி சொல்வதைக் கேட்கவே முடியாமல் அவமானத்தினாலும் கோபத்தினாலும் முகம் மாறுபட்ட புஷ்பாவுக்கு சடக்கென்று எங்கிருந்தோ ஒரு தைரியம் உண்டாகிய வேகத்தில், டீச்சர்! மன்னிக்கவேண்டும்! அஸாத்ய

மான படிப்பைப் படித்துவிட்டு எங்க அக்கா வாரிக் கட்டிக் கொண்ட லாபமும் குடும்பத்திற்கு உண்டான சகிக்கமுடியாத கஷ்டமும் போதும்! நான் அத்தகைய படிப்பை இனி படிக்கத் தயாராயில்லே! நான் இனி பள்ளிக்கூடமே வரப்போவதில்லே. தயவுசெய்து என் பெயரை அடித்துவிடலாம்! நமஸ்காரம்! என்று டீச்சரே ப்ரமிக்கும்படியாகக் கூறிவிட்டு ஒரு விநாடியும் நிற்காமல் பறவைபோல் பறந்து சென்றுவிட்டாள்.

இத்தனை சின்னஞ் சிறுமி சிறிதும் பயமின்றி என்னையே எதிர்த்துப் பேசி எவ்வளவு துணிச்சலாகப் போகிறாள்? இனி பள்ளிக்கூடம் வரவில்லையாமே; படித்ததனால் அக்கா கெட்டு விட்டாளாமே! என்ன குண்டு தைரியமான வார்த்தை? எத்தகைய திமிர்பிடித்துப் பேசிச் செல்கிறாள்! என்று உபாத்யாயினியின் மனத்தில் துணுக்குற்று அதிர்ச்சியும் உண்டாகியது; அந்த ஆத்திரத்தை ரிக்ஷாக்காரன்மீது காட்டி உம் போடா! சீக்கிரம் போ! என்று அதட்டினாள்.

அந்தம்மாளுக்கு வாடிக்கையாக ஓட்டும் ரிக்ஷாக்காரனை கையால் சற்று சுதந்திரத்துடன் 'அந்தகொயந்தெசொல்ரது நிஜந்தானுங்க; படிச்சு படிச்சு கொம்பபேரு பாயா பூட்டாங்கன்னு!' என்று இடக்கே ஒரு வார்த்தையை வீசி எறிந்தான்; அவனை மேலும் அதட்டியவாறு பலமானயோசனையில் ஆழ்ந்தாள்.

துடுக்காகப் பேசிவிட்டுச் சென்ற புஷ்பாவுக்குத்தான் ஏதோ ஒரு சிறிய காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக ஒரு படபடப்பு உண்டாகியது: அந்த வேகம் நடையில் பின்னும் அதிகப்பட்டது. முதல் நாள் தன்னுடைய பிதா தனது நண்பர் வீட்டிற்குச் சென்று கேட்டதும் அங்கு நடந்த விஷயங்களையும் தன் தாயாரிடம் சொல்லியதை மறைவில் கேட்டுக் கொண்டிருந்ததால் அந்த நினைவுவந்ததும் மனத்தை திடப்படுத்திக்கொண்டு அந்த வீட்டிற்குத் தைரியமாய்ச் செல்வது என்று தீர்மானித்து அத்தெருவை அடைந்தாள்.

தெருக்கோடியில் இவள் போகும்போது அவர்களுடைய மகன் கட்டையை ஊன்றியவாறு வெளியேவந்து ரிக்ஷாவில் ஏறி ஆபீஸுக்குச் செல்வதைப்பார்த்தாள். பிறகு மெல்ல ஆழ்ந்த யோசனையுடன் அவ்வீட்டிற்குச் சென்றாள், வாசல் பக்கம் நடையைத்தாண்டுவதற்குள்... என்னை பகவான்தான் காப்பாற்றினார். ஏதோ நம்ம பையனை உத்தேசித்து நான் 500 ரூபாயை சொளைசொளையாய் அந்த முதலியாருக்குத் தொலைத்துவிட எண்ணினேன். நல்லவேளை நீங்கள் தான் தடுத்தீர்கள். கலப்புமணமும் கண்ராவியும் நம்ம மானம் கப்பலேறுது காப்பாற்றினாரே! அந்த மனிதன் இத்தனை கேவலமானவர் என்று தெரிந்தால் நான் வீட்டுவழியே சேர்த்திருக்கமாட்டேன். அவரவர் ஜாதி அவரவர்களுக்கு மிக்க

உயர்வுதான்; சகலவிதத்திலும் தம்தம் மதப் பற்றுதலுடன் ஐக்யமாக வேலைசெய்யவும் சினேகப்பான்மையில் சிறப்புறவும் வேண்டுமேயன்றி மதம் விட்டு மதம் மாறுவதையும் கலப்பு மணத்தையும் யார் விரும்புவார்கள்? அதீதபடிப்பின் போக்கினால் இத்தகைய புத்திகெட்டுவிடுகிறது சீச்சீ! அவர்களுடைய பிள்ளைகளும் தத்தாரிகளாமே, இன்னும் அரைடஜன் பெண் பிசாசுகள் இருக்கிறதுகளே! அதுகளும் இம்மாதிரி என்று ஊர்சிரிக்கப்போகிறதோ! என்று காரஸாரமாகச் சொல்கிறதைக்கேட்ட புஷ்பாவின் ஸப்தநாடிகளும் அடங்கிப்போய் விட்டது. தான் எதை உத்தேசித்துவந்தளோ! அந்த விஷயம் படுதோல்வியாகிவிட்டதை அறிந்ததும் தலைசுற்றவாரம்பித்தது இவர்களுடைய மகன் நொண்டியானாலும் பாதகமில்லை; நான் வலிய கல்யாணம் செய்துகொள்கிறேன், என் தாயாரின் குடும்பத்தைத்காப்பாற்றுங்கள்! இச்சமயம் நீங்கள் கைவிடக் கூடாது என்று அந்தம்மாளிடம் நேரில் கேட்கவே மனத்தை திடப்படுத்திக்கொண்டு எத்தனையோ விஷயங்களைப்பற்றி எதிர்காலத்திற்கான க்ஷேமத்தைக்கோரி நான் மனக்கோட்டை கட்டிக்கொண்டு வந்ததெல்லாம் இடிந்து தவிடுபொடியாகி விட்டதே, குடியைக்கெடுக்கும் கோடாரிக் காம்பு என்று பெரியவர்கள் சொல்லும் பழமொழி இப்போது சரியாகிவிட்டதே. என்ன செய்வேன். அந்த ஒருபாடுபாவி செய்த சதியான வேலை குடும்பத்தையே இப்படியா ஆட்டிவைக்கும். இங்கு இனி நான் தலைகாட்ட யோக்யதை எது? போனால் வீணான அவமரியாதையும் வசையும்தான் கிடைக்கும். அத்தை வீட்டிற்குப்போனால் அங்கேயும் இதேபுயலடித்து விரட்டியது. இங்கும் இதே புயலா! இந்த ஊர் முற்றும் இதே புயல்தான் அடித்து எங்கள்குடும்பத்தையே த்வம்ஸம்செய்துவிடுமா! இதென்ன அனியாயம்? என்று தனக்குள் குமுறித் தவிக்கையில் அவர்களுடைய பேச்சு மீண்டும் காதில்பட்டது.

நான் கூட இப்படிப்பட்டவிபரீதப்போக்கில்அவனுடைய குடும்பம் மூழ்கிவிடும் என்று நினைக்கவே இல்லை. ஏறுபிடித்தவன் என்ன செய்வான். பானைபிடித்தவள் பாக்யசாலி...குடும்பத்தின்செழிப்புக்குக்குடும்பத்தலைவிதானேகாரணம். இத்தனை தூரம் ஆட்டிவைக்கும் ஆட்டத்திற்குக் காரணம் வள்ளியம்மாதான்! ஆதியில் அவளுடையதடபுடலைப் பார்க்கவேணுமே! உற்றார் உறவினர் ஒருவருமே லக்ஷ்யமில்லை. சினேகிதர்களுடைய நட்புமுக்யந்தான் என்றாலும் இதிலும் நேர்வழியில் இருக்கும் உத்தமர்களின் நேசமும்குடும்பப்பாங்கும்இருந்தால் இத்தனை தூரம் வராது, தாந்தோனித்தனமாகத் தன் மக்களைப்பழகவிட்டு,வளரவிட்டு வேடிக்கைப்பார்த்தால் இவ்வளவுதான்கதி, நீ நேற்று 500 ரூபாயைக் கொடுத்துவிட்டு அவர்களுடைய மகளை உன் நொண்டிப்பிள்ளைக்கு மணம்செய்துவிட

வ்யாபாரம் செய்வதுபோல் நினைத்தாயே! நான் அவர்களுடைய சம்மந்தமே வேண்டாமென்று ஓரேயடியா யடித்து பேசினேனே...பாவம். என் நண்பனுடைய நிலைமைவேறாகி விட்டது. இப்போது கூட அந்தம்மாள் தலைகுனியாமல் ஒவ்வொரு ஜாதியில் ஒவ்வொரு மருமகப்பிள்ளைவந்துவிட்டால் ப்ரமாதமாய்ச் சந்தோஷப்படுவாள் என்றுதான் எண்ணுகிறேன். சென்றவாரம் குதிரைப்பந்தய இடத்தில் இவர்களுடைய இரண்டு பெண்களும் பிள்ளைகளும் பல சோதாக்களுடன் கூடி கும்மாளமடித்தவாறு இருந்ததை எனது ஆபீஸ் நண்பர் பார்த்து விட்டுவந்து சிரிசிரியென்று சிரித்தார்; அதனால்தான் நான் 500 ரூபாயும் கொடுக்கவேண்டாம், அந்த சம்மந்தமும்வேண்டாம் என்று சொன்னேன். தெரிந்ததா! என்று பேசுவதை அதற்குமேல் அவளால் கேட்கமுடியாமல் கண்ணீர் பெருகத் திரும்பிவிட்டாள்.

அதேசமயம் ஒரு வைதீகர் புஷ்பாவைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தபடியே! அடேடேடே...ஸ்ரீமதி ஸையத் உஸேன் சகோதரியா என்று கேட்டவாறு க்ரூரமாய்ப்பார்த்த பார்வை புஷ்பாவின் தலையில் செம்மட்டியாலடிப்பதுபோல் தோன்றியது. தனது கால நிலைமையில் யாரையும் எதிர்த்துப் பேசுவதற்கு முகம் இல்லையல்லவா! தலை குனிந்தபடியே நடந்தாள்.

சின்னஞ் சிறுமியானாலும்கூட தன்னுடைய தம்பி முத்துவின்மீது அவளுக்கு அலாதிப்ரியம். இரட்டைப் பிறப்பு என்பது அனேகருக்குத் தெரியாது. இதில் ஒரு ரகஸியம் என்னவென்றால் முத்துவுக்கு ஜலுப்புபிடித்தால் புஷ்பாவுக்கும் ஜலுப்புபிடித்துவிடும், அவனுக்கும் இவளுக்கும் சேர்ந்தாப் போலவே சகலமும் நடக்குமாதலால் சுபாவத்திலும் அனேகமாக ஒன்றாகவே இருக்கிறவர்கள். முத்து மிகவும்பயந்த சுபாவம் என்றாலும் பிடிவாதம் சுயமரியாதை ரோஷம், முதலிய குணங்கள் மிகுந்தவன். அவனுடைய போக்கு புஷ்பாவுக்குத் தெரிந்ததுபோல் வள்ளியம்மாளுக்குக்கூடத்தெரியாது. இன்று பரீக்ஷைக்குப்பணங்கட்டவில்லையேயென்கிற மனத்தாங்கலினால் எங்கே மனம் உடைந்து குளத்தில் கிணற்றில் விழுந்துவிடுவானோ என்கிற பயம் வேறு பாதித்ததால் நேரே வீட்டிற்கே வந்து விடவேண்டும் என்று தோன்றிவிட்டது. உடனே வீட்டைநோக்கி ஓடிவந்தாள்.

அப்போது இவளுடைய நான்காம் அண்ணன் அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்தவன் புஷ்பாவைப் பார்த்ததும், புஷ்பா...நில்லு. நில்லு. ஏன் இப்படி ஓடுகிறாய். என்று இழுத்து நிற்கவைத்தான். அவன் இரவு நேரம் ஆபீஸில் வேலை செய்து விட்டு இப்போதுதான் வீட்டிற்குவருவதால் வீட்டில் நடந்த எந்த விஷயமும் தெரியாதாகையால் அவன் இவ்வாறு கேட்டான். அவனுடைய உத்யோகத்திற்காகத்தான் டிபா

விட்டு கட்டுவதற்காக முதல் தினம் இவர்களுடைய பிதா அலைந்தார் பாவம்-

புஷ்பா தன் அண்ணனைக்கண்டதும் எப்படியோ, அடக்க முடியாத துக்கம் வந்துவிட்டது. அழுதுக்கொண்டே நடந்த சகலமான விஷயங்களையும் கூறி, குட்டியண்ணா! இப்போது நம்முடைய குடும்பம் அந்தரத்தில் ஆதாரமில்லாது நின்று தத்தளிக்கின்றது... அவமானமென்கிற பேய் அப்படியே நம்மை விழுங்கிஏப்பமிட்டுவிடும்போல் உருமுகிறது. நாம் உடனே இந்த ஊரைவிட்டு எப்படியாவது வெளியேபோய் க்ராமத்தில் கொஞ்சகாலம் வாழ்க்கை நடத்தினால்தான் நாம் தலை தூக்கலாம். இப்போது என்ன செய்வது என்றே தெரியவில்லை. என் சரீரத்தில் குந்துமணி பொன்னாவது இருந்தால் அதை விற்று ரயில் சார்ஜுக்கும் குடும்பத்திற்குவேண்டிய செலவுக்கும் உபயோகிக்கலாம்: அதற்கு வழியே இல்லை. என்ன செய்வது அண்ணா... என்றாள்,

இந்த விஷயங்களைக் கேட்டு அதிர்ச்சி தாங்காத அவன்... புஷ்பா! நடுவீதியில் நாம் பேசுவதுகூட இளப்பம் வா! நாம் வீட்டிற்குப்போய் இதற்கோர் வழி செய்யலாம் என்று சொல்லி வலிய இழுத்துக்கொண்டு போய்விட்டான். நான் எந்த வகையிலாவது, தயாநிதி புத்தகத்தில் வரும் நித்ய கல்யாணியைப்போல் த்யாகம் செய்து என் தாயின் குடும்பத்தைக் காப்பாற்ற எண்ணியும் என் விதி என்னைவிரட்டியடித்துவிட்டதே, இன்று கிளம்பிய இரண்டிடங்களிலும் படுதோல்விதானா, அந்த மூத்த மூதேவிகளின் கண்முன்பு நாம் எப்படியாவது பெற்றோர்களையும் உடன்பிறந்தவர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று மனக்கோட்டைகட்டிக்கொண்டு வந்த என்னுடைய ஆசை எல்லாம் நிராசையாகவாபோய்விடவேண்டும் என்கிற வருத்தம் அவள் நெஞ்சை யழுத்திவேதனைசெய்தது.




தமிழ்ப்
பத்திரிகையுலகிலேயே
ஒரு புதுமையாக
ஒரே ஆசிரியையின்
பேனாவிலிருந்து
ஸப்த ஸ்வரம் போன்ற
ஏழு அம்சங்களுடன
(31 உருப்படிகளுடன்)
தமிழ்ப் பூங்கொத்தாக
உருவாகியுள்ளது.

நிர்மல நீரோடை ரூ. 3,

புஷ்பா வீட்டிற்கு வந்த உடனேயே முதலில் தன் தாயாரைப் போய்ப் பார்த்தாள்; அவள் அப்போதும் எழுந்திருக்காமல் படுக்கையிலேயே கிடந்ததால் மிகுந்த பயம் உண்டாகிவிட்டது. தன்னை அழைத்து வந்த குட்டியண்ணாவிடம் தனிமையில் பேசி அவனிடம் எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி கொஞ்சம் பணமாவது சேகரித்து க்ராமத்திற்கு முதலில் போய் விட்டால் மிகமிக நல்லது என்கிற யோசனை தான் தோன்றியது. அதனால் அவனிடம் தனிமையில் சென்று குட்டியண்ணா' இதற்கு விமோசனம் என்ன சொல்கிறாய். நான் இனி படிக்கப்போவதில்லை. முத்துவுக்கு மட்டுமாவது பணம் கட்டி......

என்று முடிப்பதற்குள் சுந்தரம், புஷ்பா எனக்கந்த கவலை இல்லை என்றா எண்ணுகிறாய். நான் ப்ரதி தினமும் ஆபீஸ் வேலைக்குத் தடங்கல் இல்லாமல் நேரத்தை வகுத்துக்கொண்டு ஒரு செல்வவந்தர் பிள்ளைகளுக்கு ப்ரைவேட்டு சொல்லிக் கொடுக்கிறேன். அவர் மாதம் 20 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகப் பேச்சு. இன்றுதான் முதல் சம்பளம்வந்தது. உடனே முத்துவுக்குப் பரீக்ஷைக்கு அதைக் கட்டிவிட்டுத்தான் நான் அலையக்குலைய ஓடிவருகிறேன். வந்த இடத்தில் இத்தகைய விபரீதச்செய்தியைக்கேட்டு மனது துடிக்கிறது. ஏற்கெனவே அம்மாவுக்கு இதய பலவீனம் நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. என்றைக்கு நம்மை விட்டுமறைந்து விடுவாளோ என்கிற பயத்துடன் நான் இருக்கிறேன். இப்படிப்பட்ட அதிர்ச்சிகளை அம்மா எப்படித்தாங்கப்போகிறாள். இத்தனை கஷ்டகால நிலைமையில் 500 ரூபாய் இனி நமக்கு எங்கே கிடைக்கப்போகிறது. அது கிடைத்து டிப்பாஸிட்டு கட்டினால்தானே எனக்கு வேலை நிற்கும்! இல்லாவிட்டால் நான் கொண்டுவரும் சொல்பதுகையும் இல்லாமல் குடிமுழுகிவிடுமே என்னசெய்வது என்றுதான் நானும் தவிக்கிறேன் என்று சொல்லமுடியாமல் தொண்டையை துக்கம் அடைத்தது.

புஷ்பா:—அண்ணா! அதே அன்னையின் வயிற்றில்தானே நாம் எல்லோரும் பிறந்தோம். இதில் அவர்கள் ஏன் கல்வினும் கொடிய இரும்பு நெஞ்சம்படைத்துக் குடிக்கே நாசகாலிகளாக அமையவேண்டும், நம்முடைய மனதுமட்டும் ஏன் இப்படித் தவிக்கவேண்டும். நம்முடைய அம்மாவின் துடிப்பைக்கண்டு சகிக்காமல்தான் நான் என் மனத்தை நன்றாகத் துணியச்செய்து கொண்டு அந்த நொண்டியை நானே மணப்பதாக வலியச் சென்று கேட்டு இந்த நெருக்கடியான சமயத்தில் ஆதரிக்க நினைத்தேன். கலப்புமணத்தினால் குடும்பத்தின் கண்ணியத்தையே பாழாக்கிய அந்தத் திமிர்படைத்தப் பாவி

களின் கண்முன்பு என்னுடைய த்யாகத்தைக் காட்டி அவர்களுடைய மனச்சாட்சியே கொன்று வதைக்கும்படிக்குச் செய்ய எண்ணினேன்; அந்தப்பாவிகளின் செய்கையினால் அந்த எண்ணத்தின் தலையிலும் இடிவிழுந்தது போலாகிவிட்டதே. என்ன செய்வது...

சுந்தர:—என்ன! என்ன! நொண்டியை மணக்க......

புஷ்பா:—என்ன அண்ணா! இப்படி ப்ரமாத வியப்புடன் கேட்கிறாய், பெத்ததாயைக் காப்பாற்றுவதற்கும் ஆபத்தான நிலைமையில் கை கொடுத்து உதவுவதற்காகவும் நாம் கடமைப்பட்டிருக்கவில்லையா......அண்ணா! இப்போதும் பாதகமில்லை: நீயாவது அந்த நொண்டியிடம் போய் நானே வலுவில் கட்டாயப்படுத்திச் சொல்லியதாகச் சொல்லி ஒருவருக்குமே தெரியாமல் ஏற்பாடு செய்துவிடு. நான் மனப்பூர்வமாய் நம் குடும்பத்திற்காக இந்த காரியத்தைச் செய்து முடிக்கத் தயாராயிருக்கிறேன். இது வீண் ஜம்பத்திற்காகவோ, அக்காவின் மீதுள்ள ஆத்திரத்திற்காகவோ நான் சொல்வதாக நினைக்காதே. என்னுடைய இதயபூர்வமாய், கடவுள்மீது ஆணையாய்ச் சொல்கிறேன். தயவு செய்து இன்றே அவரிடம் நீ சென்று இதைப்பற்றி தீர்மானமாய்ப் பேசி முடிவு செய்து கொண்டுவந்துவிடு நீ யோசனையே செய்யாதே........ஏன் அண்ணா! இப்படி ஏதோமாதிரி பார்க்கிறாய். கண்ணீர்விடுகிறாய்

சுந்தர:—ஏன் கண்ணீர்விடுகிறேனா......புஷ்பா! இந்தப் பாழுங்காதால் இத்தகைய ஒரு வார்த்தையைக் கேட்கிறதால் என்கண்கள் தானாகவே நீரைக்கக்குகின்றன. இதயம் வெடித்து விடும்போல் அத்தனை வேகமாக அடித்துக்கொள்கிறது. உன்னுடைய புத்திசாலித்தனத்திற்கும் அழகிற்கும் சரியான வரனைத்தேடி நான் முன் நின்று விவாகத்தைச்செய்துவைக்க முன் வாராமல் நொண்டியையும் ஊமையையும்...குருடையும்...செவிடையும்—நானா என் மனம் துணிந்து பேசி உனக்கு மணம்செய்து வைப்பது, என்னால் இந்த வார்த்தையைக் கேட்கவே முடியவில்லையே: புஷ்பா! நம் குடும்பத்தைக் காக்கும் பொருட்டு நீ உன்னுயுள் காலம் பூராவும் வாழ்க்கையைப்பாழ்ப்படுத்திக்கொண்டு சந்தோஷத்தையும் இளமையின் தாண்டவத்தையும் த்யாகம் செய்து கொண்டு கஷ்டவாழ்க்கையில் தீக்குளிப்பதுபோல் இறங்கிவிட என் மனம் துணியவில்லை புஷ்பா

புஷ்பா:—(இடைமறித்து) அண்ணா! நீ சொல்வதை இந்த சமயம் நான் சற்றும் ஒப்புக்கொள்ளமாட்டேன். என் ஒருவளுடைய அல்ப அழகும் யவ்வனமும் இன்னும் சிலஆண்டுகளில் தேய்பிறைமதிபோல் தேய்ந்து உருக்குலைந்து முதுமையில் தாவிவிடப்போகிறது: இதற்காக நிரந்தரமாய் ப்ரகாசிக்கக் கூடிய நம் குடும்ப கண்ணியத்தைக் கை நழுவவிட்டு நசித்து நாசமாய்ப் போவதற்கு நான் விடமாட்டேன். முத்துவுக்கு

பரீக்ஷைக்குப் பணம் கட்டினுலும் மேல்கொண்டு உன்னுடைய டிபாஸிட்டிற்கு என்ன செய்வது; வீட்டு வாடகை நான்கு மாதமாகக் கட்டவில்லேயாம். அவன் வந்து அப்பாவிடம் முந்தாநாள் இரைந்ததையும் நான் பார்த்துவிட்டேன். யானேயைக் கட்டி தீனி போடுவதுபோல் இனி இத்தனே பெரிய வீட்டிற்கு வாடகை யார் கொடுப்பது. மற்ற தம்பி, தங்கைகளின் சம்பளம்; இவ்வளவு பெயர்களுக்கும் சாப்பாடு; துணிமணி, முதலியவைகளுக்கு என்ன செய்வது? எந்தவிதத்திலும் காலணு வருவாயில்லாமல் செலவுமட்டும் விபரீதமாகிவிட்டால் யாரால் அண்ணு சமாளிக்கமுடியும். வெட்கக் கேட்டை வெளியில் சொன்னுல் சிரிப்பார்கள். மளிகைக் கடையில் பாக்கி, தயிர்க்காரன், பால்காரன் இவர்களுக்கும் பாக்கிதரவேணும். நான் மூளேயில்லாமல் இத்தனே வருஷகாலம் படிப்பு, படிப்பு என்று வெறிபிடித்து அதிலேயே நாட்டமாயிருந்துவிட்டதால் வீட்டில் எந்த விஷயத்தைப் பற்றியும் கவனிக்காமல் இருந்துவிட்டேன். இனி என்னல் இருக்கவே முடியாது. முதலில் கால் வயிறு கஞ்சிக்கு வழி காட்டும்உன்னுடைய உத்யோகமும் கிலேக்க 500 ரூபாய்எது? அதைச் சொல்லு! நன்ருகயோசனேசெய்து இந்த உதவியைச் செய்யவேண்டும்- அம்மாவின் அதிர்ச்சியில் அவளும் இறந்துவிட்டால்...நெருப்பென்ருல் வாய் சுட்டுவிடுமா? கரும்பென்ருல் தித்தித்துவிடுமா? அம்மாவின் நிலேமை எனக்கு மிகவும் கவலேக்கிடமாகவே இருக்கிறது. கடவுள் கருணேயினுல் அம்மாதிரி விபத்துக்கள் எதுவுமே நேராமல் இருக்கும்படி சதா கடவுளே ப்ரார்த்திக்கின்றேன்...பதில் சொல்லண்ணு...என்று ஆத்திரத்துடன் இதயத்தைத் திறந்து காட்டிப் பேசினுள்.

சுந்தரத்திற்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லே. ஒரே குழப்பமாகிவிட்டது. சில சினிமாக்களில் பார்ப்பதுபோலவும் கதைகளில் படிப்பதுபோலவும் தன் பிதா கடன்காரர்களால் கண்டிக்கப்பட்டு கைதியாக்கி சிறையில் அடைத்துவிட்டதுபோன்றும், ஊரார் ஏசிப் பேசிப்பழிப்பது போன்றும், தன் தாயார் இறந்துவிட்டது போன்றும், மூத்த சகோதர சகோதரிகள் விலகிப்போய்விட்டது போன்றும், தன்னேயும் வேலேயைவிட்டு நீக்கிவிட்டதுபோன்றும், குழந்தை குட்டிகளுடன் நடுத்தெருவில் ஒருவாய்த் தண்ணீருக்கும் பஞ்சாய்ப் பறந்து தத்தளிப்பதுபோன்றும், இருக்க இடமின்றி உடுக்க உடையின்றி தவிப்பதுபோலும் ஒரு பயங்கரமான அதிர்ச்சி மனத்தில் உண்டாகிவிட்டதால் ஒரேயடியாய்க் கலங்கிப்போய் பதில் சொல்லத் தெரியாமல் தவித்துக்கொண்டே இருக்கையில் புஷ்பா அவனுடைய தோளே ஆட்டி அசைத்துக் குலுக்கிய பிறகே அந்த பயங்கர கல்பனேயிலிருந்து அலறியவாறு கலேந்து உடலேச்சிலிர்த்துக்

கொண்டு புஷ்பாவைப்பார்த்தான். புஷ்பா! என்னை என்னமோ செய்கிறது: மனம் ஒரு விதத்திலும் நிலைகொள்ளவில்லை. நீ என்னை விட வயதில் சிறியவளாக இருந்தும்உனக்குள்ளயோசனையும் எதிர்காலத்தைத்திட்டமிட்டுஅதற்காக முன்னெச்சரிக்கையாக இத்தனை பெரிய விஷயங்களை அலசிப்பேசுவதும் கேட்க எனக்கே வெட்கமாயிருக்கிறது; துக்கமாயிருக்கிறது' நம்அப்பாவோ மகாமானி, எதையும் தாங்காதவர்; இந்தமாதிரி ஆபத்துக்கள் வந்துவிட்டால் அதைச் சமாளிக்க முடியாமல் தற்கொலை புரிந்துவிட்டால் என்ன செய்வது......இத்தகைய யோசனைகளாகிய அலையின்மத்தியில் அகப்பட்டு விழிக்கிறேன் புஷ்பா! இத்தனை வயதாகியும் இதுவரையில் இந்த நிமிஷம் வரையில்-நான் இப்பேர்ப்பட்ட கவலையை அனுபவித்தறிய மாட்டேன்: ஏன் நினைத்துக் கூட பார்த்ததில்லை. என்னுடைய சினேகிதன் ஒருவன் வீட்டில் கடன்காரன் வந்து வாசலில் தமுக்கு தட்டியபோது அவனும் அவன் வீட்டாரும்கண்கலங்கிய பரிதாபத்தை நான்ஏதோ மேல்வாரியானஉணர்ச்சியுடன் பார்த்தேனேயன்றி இத்தகைய பயங்கர அதிர்ச்சியுடன் கூடிய உணர்ச்சியினால் தாக்கப்பட்டுப் பார்க்கவில்லை. அந்த சினேகிதனின் உள்ளம் இப்படித்தானே வெடித்திருக்கும் என்று இப்போது நெஞ்சு நினைக்கிறது...இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லையே......

என்று இவர்கள் குழம்பி மனம் உடைந்து பேசும்போது உள்ளே ஏதோ இரைச்சல் போடும் சத்தம் கேட்டு சற்றுத் திரும்பிப்பார்த்தார்கள். தரித்திரமூதேவி! வீட்டில் அடுப்பில் பூனைகுட்டி தூங்குகிறதே, இதென்னம்மா அனியாயம்! நான் பட்டினியாய் வேலைக்குப் போவதா! சமயல் செய்ய இன்னும் நேரமாகவில்லையா! இதென்னம்மா படுக்கை? வீடுவீடாகவா இருக்கிறது...என்று அருணு டாம்டும் என்று கத்துவதைக் கேட்ட புஷ்பாவின் ரத்தம்கொதித்தது. சுந்தரத்திற்கு அதற்கும் மேலான ஆத்திரம் உண்டாகிவிட்டது.

இருவரும் தடதடவென்று உள்ளே சென்றார்கள். ஆத்திரத்தாண்டவமாடும் பத்திரகாளியைப்பார்த்து புஷ்பாமிகவும் விரைப்புடன், அடுப்பில் பூனைக்குட்டியும் தூங்கும், யானைக் குட்டிகூட தூங்கும்! ஏனென்றால் வீட்டுப் பெண்ணுக்கு அத்புதமான கலப்பு மணமாகிய சந்தோஷம் அடுப்பில் பொங்கித் தளும்பிக் குளிர்ந்து தூங்குகிறது! கல்யாணவைபவத்தின் அபாரசந்தோஷத்தினால் இன்றுபட்டினிதான் பெரும்விருந்து தெரிந்ததா...என்று தன்னை மீறிய ஆத்திரத்துடன்கூறினாள்.

அருணுவின் கண்கள் சிவந்தது, எந்த தடிக்கழுதை இத்தனைத் துணிவுடன் பேசுகிறது, என்று முடிப்பதற்குள் புஷ்பா சற்றும் சளைக்காமல்,'' எந்த தடிக்கழுதையும் வெளியிலிருந்து வண்ணான் வீட்டை விட்டு வரவில்லை. முன்னறிதெய்வங்களின்

மனத்தை நோகச்செய்து வேகவைத்துச்சாகவடிக்கத்துணியும் மூத்தகோவேரிக்கழுதைகளின் தங்கை குட்டிக்கழுதைதான் தெரியுமா?...

என்று முடிப்பதற்குள் சுந்தரம் ஆத்திரத்துடன் பேசத் துடங்கி: அக்கா! நான் இதுவரையில் உன்னெதிரில் நின்று கூட பேசியறிய மாட்டேன்: என்னுடைய பரிசுத்தமான இதயத்தில் சந்தோஷமும் ஆனந்தமும் தேங்கிக் கிடந்ததேயன்றி இந்த நிமிடம்வரையில் கவலையோ அதிர்ச்சியோ அறியாமல் சுதந்திரப் பறவைபோல் பறந்து திரிந்து ஆனந்தமாகத்தான் இருந்தேன். மூத்தவர்களாகப் பிறந்த உங்களால் நம் பெற்றோர்களும் எப்படியோ இன்ப வாழ்க்கை வாழவும் இனிய பதவி அடையவும் எண்ணி மனக்கோட்டை கட்டியதெல்லாம் அதே உங்களால் நிர்மூலமாகிவிட்டது. நீ எனக்குப் பெரியவளானுல் புத்தியில் மிகமிகக் கேவலமாக நடக்கும் விபரீதப் போக்கும் நடத்தையும் செய்கையும் நம் அன்னையின் உயிரைக் குடித்து எக்காளமிட்டுவிடும்போலிருக்கின்றது. நீங்களெல்லாம் பெண்களா? பேய்களா! ஊர் சிரிக்கின்றது! என்று இவனுடைய ஆத்திர த்வனியில் ஸ்வரம் ஏறி உச்சத்தை எட்டிக்கொண்டே போவதைக் கண்ட அருணா,

ஷட்டப்...ராஸ்கல்! சுண்டைக்காய்ப் பையன் பெரிய ப்ரஸங்கம் பண்ணவந்துவிட்டான், ப்ரஸங்கம்! சீச்சீ வாயை அடைத்துக்கொண்டு போய்விடு நாய்ப் பயலே என்று முடிப்பதற்குள், "என்ன! என்ன? நாய்ப் பயலா—நானு நாய்ப் பயல்? ஆமாம்! பேய்ப் பெண்ணின் முன்பு நாய் தானே நிற்கும்? மனிதர்கள் நின்று பேசும் மதிப்பும் கௌரவமும் உண்டாகுமா என்ன! பேஷ்! வெகு பொருத்தமாகச் சொன்னுய்!"

என்று பல்லைக்கடித்துக்கொண்டு கூறும் இரைச்சலைக் கேட்டுத் தள்ளாடியவாறு வள்ளியம்மாள் எழுந்துவந்து, சுந்தரம்! நில்லு...பேசாமல் நில்லு... அருணா... அருணா...... போகாதே...இப்படிவா....நீ உன்னையொரு முரட்டு ஆண்பிள்ளையாக நினைத்திருக்கிறுயேயன்றி பெண்பிள்ளை என்பதை மறந்துவிட்டாய்—மறந்துதான் பேசுகிறுய்; உங்களால் நான் எதிர்பார்த்த சந்தோஷப் பூங்காவிற்குப் பதிலாகக் கடுமையான பாலைவனமும் கல்லும் முள்ளும் நிறைந்த காடுமுரடான காடும் எனக்குக் கிடைத்ததுபோதும். அருணாஇதுவரையில் நீ உத்யோகம் செய்து நாங்கள் கண்ட பலன்போதும்; இனி நீ உத்யோகத்திற்குப் போகவேண்டாம்...போகக்கூடாது; இது உன் தாயாரின் கட்டளை; குலதெய்வத்தின் ஆணை...

என்றுஆவேசத்துடன் பேசும்போது சற்றும் அச்சமோ! மதிப்போ இல்லாத அராக்கட்டைத் தனத்தில் அலறுவது போல் ஒரு பீரங்கிச் சிரிப்பு சிரித்தபடியே அடேடேடே!

அம்மாவின் வார்த்தை அதிவேகமாக முன்னேறிச் செல்லும் புதுமலர்ச்சி எழுத்தாளர்களின் பேனா ப்ரவாகம்போலும், அத்புதமாக ப்ரஸங்கம் செய்யும் சொல்மாரி ப்ரஸங்கியின் வாக்குப் போலும், நூதன நாடகத் தமிழ்போலும் ப்ரமாதமாயிருக்கிறதே! சுதந்தரப்பறவைபோல் இன்ப உலகில் ஆநந்தமாகச் சிறகடித்துப் பறக்கும் இந்த அருணாவுக்கா தடை உத்தரவு? கட்டுதிட்டங்கள்? பேஷ்! பேஷ்! வெகு அழகு; இதோ! இந்த அதிக ப்ரஸங்கி ராக்ஷஸப்பதர்களிருக்கிறார்களே! இந்தத் துடுக்குப்ப்ரக்ருதிகளின் வாயை அடக்கி வழிக்குக் கொண்டுவாம்மா! அவர்களால் நீ அப்படியே சொர்க்க போகத்திற்கு ஏணிமீது ஏறிச்சென்றுவிடலாம், "அம்மா! அதிகமாய் என்னிடம் வாதம் வைத்துக்கொள்ளாதே. நான் இனி இங்கு வரப்போவதில்லை. என் சினேகிதைகளுடன் தனி விடுதியில் தனிவாசம் செய்ய ஏற்பாடுகள் செய்துவிட்டேன். இனி என்னைப்பற்றிக் கவலையே வேண்டாம், குட்பை" என்று ஒரே முறைப்பில் பேசிவிட்டு சடக்கென்று போய்விட்டாள்.

இச்செய்கை எல்லோருடைய உள்ளங்களையும் தாக்கிவதைத்து அதிரச்செய்துவிட்டது. ஏற்கெனவே மெலிந்து நோயாளி போலிருக்கும் வள்ளியம்மாள் இதைத் தாங்காமல் மறுபடியும் துவண்டு சாய்ந்துவிட்டாள். இந்தக் காட்சியை இதுவரையில் பார்க்காதிருந்த சுந்தரத்திற்கு இப்போது பார்த்ததும் சகிக்கமுடியாத சங்கடம் செய்து வாட்டி வருத்தியது.

---

ஜகன்மோகினி — 30-வது ஆண்டு ஆரம்பம் : ஜனவரி 1953
வருடச் சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 4.
V. P. கிடையாது. முன்பணமனுப்பவும்

---

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி
வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
மூன்றாவது சித்திரம் - ரூ.1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முனனோர் 3. கடவுள் இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனாமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

# சட்டம்

நம்முடைய தாய் நாட்டில் அரசனோ ஜனநாயக சபைகளோ செய்யும் சட்டங்களுக்கு ஆதிகாலத்தில் இடம் இருந்ததாகத் தெரியவில்லை. பழமையான தர்ம சாஸ்திரங்களின் கருத்தைப்பற்றி அறிஞர்கள் கூறும் தீர்மானப்படி அக்காலத்தில் நீதிபதிகள் தீர்ப்பளித்துவந்தார்கள். இந்தமுறை வெகு காலம்வரையில் அமுலில் இருந்துவந்தது. வெள்ளைக்காரர்கள் இங்கு வணிகர்களாகவந்து அரசர்களாக நாட்டை ஆண்ட பொழுதிலும் இப்படியேதான் நடைமுறை இருந்தது. ஆனால் கிழக்கு இந்தியா கம்பெனி ஆட்சி மாறி ஆங்கில அரசி விக்டோரியா ராணி இந்தியா சக்கரவர்த்தினியான பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சட்டசபைகள் மூலமாக சட்டங்களை இயற்றும் முறை ஏற்பட்டதும் நீதிஸ்தலங்களும் ஆங்கில நாட்டில் உள்ளது போலவே இந்தியா தேசத்திலும் அமைக்கப் பெற்றன.

நான் ஐந்து ஆண்டுகள் வழக்கறிஞனாக இருந்து பிறகு முப்பது ஆண்டுகள் நீதிபதியாக இருந்த காலத்தில் முற்கூறப்பட்ட புதிய முறைதான் அமுலில் இருந்தது. மத்திய சட்டசபையும் மாகாண சட்டசபைகளும் ஏற்படுத்திய சட்டங்களை ஆங்கில மொழியில் ஆக்ட் (Act) என்று கூறுவது வழக்கம். அவைகளில் ஏற்பட்ட நிபந்தனைப்படிதான் நீதிவழங்கி வந்தது. அந்த சட்டங்களுடைய விதிகளை ஹைகோர்ட்டுகளும் சீமையிலிருந்த உயர்தர நீதிஸ்தலமான ப்ரிவிகௌன்ஸிலும் எப்படி விளக்கி கூறி தீர்மானமளித்தார்களோ அப்படியே எல்லா நீதி ஸ்தலங்களும் தீர்ப்பளித்து வந்தன. நம்முடைய நாட்டில் ஆதிகாலத்தில் வழக்கறிஞர் (வக்கீல்) என்ற ஒரு வேறுபட்ட தொழில் இருந்ததாகப் புலப்படவில்லை. சட்டங்கள் பல்வேறுவிதமாக ஆங்கில மொழியில் இயற்றப்பட்டு அவைகளின் படி பல்வேறு நீதி ஸ்தலங்களில் ஆங்கிலமொழியில் தீர்ப்புஅளிக்கவேண்டி இருந்ததால் வழக்கறிஞர்தொழில் இன்றியமையாததாக ஏற்பட்டது. அந்தத் தொழிலில் மகா மேதாவிகள் புகுந்துச் சட்டங்களை நன்றுபடித்து ஆராய்ந்து வாதித்து விளக்கி பெரும் புகழையும் மேன்மையையும் பொருளையும் அடைந்து நாட்டுக்கும் மேன்மையுண்டாக்கினார்கள்.

1947ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 15௳ நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்தது. 1950ம் ஆண்டு ஜனவரிமாதம் 26௳ நம்முடைய நாடு குடியரசு நாடாக ஏற்பட்டது. இதுவரை ஏற்படாத அடிப்படையான உரிமைகள் மக்களுக்கு நம்முடைய புதிய அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் நன்மை அரசியல் (Welfare State)தான் இனி முக்கிய நோக்கம். இனி அரசியல் முறையின்

முக்கிய அம்சங்களை அச்சட்டத்தின் நான்காவது பிரிவில் (Part IV) விரிவாக விளக்கக் கூறப்பட்டிருக்கின்றது. நாட்டில் நிர்வாக மந்திரி சபைகள், சட்டசபைகள், நீதிமன்றங்கள் எப்படி ஏற்படவேண்டும், நடத்தப்படவேண்டும் என்பதைப் பற்றி விவரமாக அச்சட்டம் கூறுகின்றது. அந்த சட்டத்தின் தொடக்கத்தில் சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஒழுங்கு நீதி அடிப்படையாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

இத்தகைய மாறுபாடுகள் இருந்தாலும் இதுவரையில் அமுலில் இருந்துவரும் சட்டங்களும் நீதிமன்றங்களும் நீதிமுறைகளும் முன் இருந்தமாதிரியே இருந்துவருகின்றன. ஒருமுக்கிய மாறுபாடு என்ன என்றால் உயர்தர நீதிமன்றம் முன்னிருந்த ஆங்கில ப்ரிவிகௌன்சில் அல்ல, தாய்நாட்டுத் தலைநகரான டில்லியில் சுப்ரீம்கோர்ட் உயர்தர நீதி மன்றமாக புதுச்சட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இன்றும் சட்டங்களும் வாதங்களும் நீதிமன்றத் தீர்ப்புகளும் ஆங்கிலமொழியில்தான் ஏற்பட்டிருக்கின்றன. பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் மொழியாக புதுச்சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஹிந்தி மொழியில் அவைகள் ஏற்படக் கூடும். எது எப்படி இருந்தாலும் மக்களுடைய நலமும் முன்னேற்றமும் பண்பட்ட இன்பவாழ்க்கையும்தான் இனிச் சட்டத்தின் நோக்கமாக இருக்கும்.

183125

---

மதமா, மனமா? வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணுடியே உலகம் 13. இன்னலே புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15 பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனி யில் யாவும் அவனலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா ?—மனத்திருவிளையாடல்.

ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி

ரஸிக்கமுடியாத ஒரு செய்கையாகவே என்போன்ற பல சகோதரிகள் அழுத்தமாகக் கூறுகிறார்கள். அவர்களுடைய யோக்யதைக்குத் தக்கபடி வித்வத் சபையின் ப்ரஸிடெண்டாகவும் மத்ய அரசாங்கத்தினரால் மரியாதையும் செய்ய வேண்டியது கடமையிலும் கடமையாகும் என்பது பெரும்பாலோருடைய அபிப்ராயமாகும். இது என் தனிப்பட்ட ஒருவளின் வார்த்தை யல்ல; எத்தனையோ அம்சங்களில் நம் பாரதநாடு முன்னணியில் நின்று ஸேவை செய்தபோதிலும் சிற்சில விஷயங்களில் உழைப்பை கலையின் சிறப்பைவிட—முயற்சியின் ஊக்கத்தை—அறிந்து நடத்த முன்வராது எத்தனையோ விஷயத்தில்கையைவிரித்து வேடிக்கைப்பார்த்து வருவதை நாம் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிறோம். எந்த ஒரு தொழிலிலும் பெண்கள் தங்கள் சக்தியால் சாமர்த்தியத்தினால் முன்னுக்குவந்தாலும் அவர்களை ஓங்கவிடாமல் மண்டையிலடித்துப் பொறாமைத் தீயினால் பொசுக்கி வேடிக்கைப் பார்க்க ஒரு சிறிய—பிற்போக்கானக்—கூட்டத்தார் நாளையும் காத்திருக்கிறார்கள் என்றால் பழமையைச் சொல்லப் புகுந்தால் எழுத்தில் அடங்குமா?

ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் அம்மாளுக்கு நாம் செய்யும் மரியாதை—கௌரவம்—யாவும் அவருடைய தனிப்பட்ட ஒரு நபருக்காகவன்று; அவர்களுடைய ஹரிகதா மகிமைக்கும், சங்கீதக் கலைக்கும், ஒரு பெண்மணி இத்தனை சிறப்புடன் பெருமைவாய்ந்து முன்னேறியிருக்கும் ஆச்சரியத்திற்கும் செய்வதாகும். ஆகையால் மார்ச்மாதம் 10-ந் தேதி சென்னையில் நடக்கப்போகும் அந்தம்மாளின் சஷ்டிபூர்த்தி விழாவுக்கு அந்தம்மாளிடம் அபிமானமுடைய எல்லோரும் ப்ரத்யேகமாய் நம் ஜகன்மோகினியின் வாசக அன்பர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் கலாரஸனையின் ஞாபகச்சின்னமாய்ச் சக்தியானுஸாரம் நிதி உதவி கலைத் தாயை கௌரவிக்கும்படிக்கு வணக்கத்துடன் கோருகிறேன். நிதி உதவுகிறவர்கள், காரியதரிசி, வை. மு. கோதைநாயகியம்மாள். என்றவிலாஸத்திற்கு அனுப்பி கௌரவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மகாத்மாஜி ஸேவாசங்கத்தின் தலைவி என்கிற ஹோதாவிற்காகவும் மேலே சொல்லிய கலைத்தேவியைகவுரவிக்கும் முறையிலும் எங்கள் சங்கத்து அங்கத்தினர்கள் மட்டும் ஒன்றுசேர்ந்து ஸ்த்ரீகளின் சார்பில் மார்ச்சுமாதம் 5ந்தேதியன்று வஸந்தபங்களாவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமியின் தலைமையில் சஷ்டி பூர்த்திவிழாவைநடத்தி ஸ்வர்ணகங்கணமும் ஹரிகதா கலாந்தி. என்கிற பட்டமும் ஸ்ரீஸ்வாமிகளின் ஆசியுடன் அளிக்கப்படும்

—வை.மு.கோ.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. I.



## அஜந்தா சித்திரங்கள்

அஜந்தா ஓவியங்களில் காணப் படும் வனிதாமணிகளின் வனப்பும் தேக அமைப்பும் இன்றையஸ்த்ரீகள் பலரிடத்தில் காண்பதரிதாயிருக் கிறது; வீறுபெற்ற தாய்மைக்கு லாயக்கற்றவர்களாயுள்ளனர் பலர்.

அருணவை அனுதினமும் உபயோ கித்தால் ஸ்த்ரீகளின் ப்ரத்யேகக் கோளாறுகளனைத்தும் தீர்ந்து திட காத்திரமும் தூய்மையான தாய்மை யும் ஸித்திக்கும்

# அருண

## கர்ப்பாசய ரோக நிவாரணி

கர்ப்பாசயரோகங்களை நிவர்த் தித்து பெண்மைக்குப் பெருமை யளிக்கும் ஒளடதம்.

ஆயுர்வேதாச்ரமம் லிமிடெட்
சென்னை. 17.

## வை. மு. கோ. நாவல்கள்

(தற்போது கைவசமுள்ளவை : 1953)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
நம்பிக்கைப்பாலம்

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்

அணா. 8
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ. நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | உதய சூரியன் | 1—4 |
| 2. | மதமா, மனமா ? | 1—4 |
| 3. | அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி | 1—8 |
| 4. | ராணி சிலாவதி | 1—0 |
| 5. | பெண்மணிக் கனல் | 1—0 |
| 6. | இருளில் ஒளி | 1—4 |
| 7. | ஸ்ரீ ஸ்துதி | 0—4 |
| 8. | தியாக பலி— | (அச்சில்) |